# SRI ADI SHANKARACHARYA'S APAROKSHANUBHUTI (OR) DIRECT SELF-REALIZATION

## ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியாரின் அபரோக்ஷ அநுபூதி அல்லது நேரடி அனுபவம்

### அறிமுகம்

அபரோக்ஷ அநுபூதி என்ற இந்த பிரகரணம் 144 சுலோகங்களை கொண்டது. 'நானே பிரஹ்மம்' என்ற அநுபவம் அபரோக்ஷமாக, அதாவது நேரடியாக அல்லது ப்ரத்யக்ஷமாக ஏற்படுவதற்கு வேண்டிய சாதனங்களை இதில் கூறுகிறார். ஜீவர்களையும் பிரபஞ்சத்தையும் வேறாகத் தெரிந்து கொண்டிருக்கும் வரை அத்வைத பிரஹ்ம சாக்ஷாத்காரம் ஏற்படாது. அதற்காக, சாதன சதுஷ்டயத்தை முதலில் காட்டுகிறார். தேஹாதிகள் ஆத்மாவல்ல, ஜீவ ஸ்வரூபம் ஒன்றுதான், அது பிரஹ்மம்தான், பிரபஞ்சமும் உண்மையில் பிரஹ்மத்தைக் காட்டிலும் (பிரஹ்மத்திலிருந்து) வேறல்ல, வேற்றுமைக்கு காரணம் அக்ஞானம்தான் என்பனவற்றைப் பல யுக்திகளாலும் உபநிஷத பிரமாணங்களாலும் தீர்மானிக்கிறார். ஆத்ம விசாரம் செய்து அறிந்து கொண்ட தத்துவத்தை அனுபவத்தில் அடைவதற்கு 15 அங்கங்களுடன் கூடிய ராஜ யோகத்தை நிரூபணம் செய்கிறார். மனோ தோஷங்கள் அதிகமாக இருந்தால் இந்த ராஜ யோகத்துடன் ஹட யோகத்தையும் அப்பியசிக்க வேண்டும். இல்லா விட்டால் ராஜ யோகம் மட்டும் போதுமானது. இந்த சாதனங்களால் ஏற்படுகிற ஞான நிஷ்டையைக் காட்டி உலகத்தோரின் பார்வையில் தேஹமுள்ளவராகத் தோன்றிய போதிலும் ஞானிகளின் பார்வையில் ப்ராரப்தமும் கிடையாது என்று தீர்மானித்து 'ப்ராரப்தம் மட்டும் எஞ்சி நிற்கும்' எனக் கூறும் சுருதியின் தாத்பர்யத்தையும் (அர்த்தத்தையும்) விளக்குகிறார். குரு தேவதா ஸ்வரூபமான ஹரியின் நமஸ்காரத்துடன் தொடங்கும் இந்த நூலின் கடைசியில் குருவினிடமும் ஈசுவரனிடமும் பக்தி

உள்ளவர்களுக்கு மட்டும் விரைவில் சுலபமாக பிரஹ்ம சாக்ஷாத்காரமும் முக்தி ஆனந்தமும் ஏற்படும் என்று உபதேசிக்கிறார்.

<u>முன்னுரை</u>

श्रीहरिम् परमानन्दम् उपदेष्टारमीश्वरम् ।
व्यापकम् सर्वलोकानां कारणम् तं नमामि अहं ।१।

1) I bow down to Him – to Sri Hari (the destroyer of ignorance), the Supreme Bliss, the First Teacher, Ishwara, the All-pervading One and the Cause of all Lokas (the universe).

1) பரமானந்த ஸ்வரூபியான ஸ்ரீஹரியை நான் நமஸ்கரிக்கிறேன். அவரே குரு, அவரே ஈசுவரர். எல்லா உலகங்களையும் வியாபித்து இருப்பவரும், அவைகளுக்கு காரணமாக இருப்பவரும் அவரே.

अपरोक्षानुभूति वै प्रोच्यते मोक्ष सिद्धये। सद्भिरेषा प्रयत्नेन वीक्षणीया मुहुर्मुहुः।।२।।

2) Herein is expounded (the means of attaining to) Aparokshanubhuti (Self-Realization) for the acquisition of final liberation. Only the pure in heart should constantly and with all effort meditate upon the truth herein taught.

2) மோக்ஷம் ஸித்திக்க அபரோக்ஷ அநுபூதி/பிரஹ்ம சாக்ஷாத்கார அனுபவம் இங்கு தெளிவாகச் சொல்லப்படுகிறது. இதை <u>மிகுந்த</u> ப்ரயத்தினத்துடன் (கடுமையான முயற்சியுடன்) சாதுக்கள் அடிக்கடி சிந்திக்க வேண்டும்.

<u>நான்கு சாதனங்கள்</u>

स्व वर्णाश्रम धर्मेण तपसा हरितोषणात्। साधनं प्रभवेत्पुंसां वैराग्यादि चतुष्टयम्।।३।।

3) The four preliminary qualifications (the means to the attainment of knowledge), such as Vairagya (dispassion) and the like, are acquired by men by propitiating Hari (the

Lord), through austerities and the performance of duties pertaining to their social order and stage in life.

3) அவரவர்களுடைய வர்ணத்திற்கும் ஆசிரமத்திற்கும் ஏற்பட்ட தர்ம அநுஷ்டானத்தினாலும் தவத்தாலும் (தபஸ்) பகவானை சந்தோஷப்படுத்துவதாலும் மனிதர்களுக்கு வைராக்கியம் முதலான நான்கு சாதனங்கள் ஏற்படும்.

<u>**வைராக்கியம்**</u>

ब्रह्मादि स्थावरान्तेषु वैराग्यं विषयेष्वनु। यथैव काकविष्ठायां वैराग्यं तद्धि निर्मलम्।।४।।

4) The indifference with which one treats the excreta of a crow – such an indifference to all objects of enjoyment from the realm of Brahma to this world (in view of their perishable nature), is verily called pure Vairagya.

4) பிரஹ்மா முதல் ஸ்தாவரம் (அசைவற்ற பொருட்கள்) வரை எல்லா விஷயங்களிலும் ஆசை இன்மை வைராக்கியமாகும். காக்கையின் விஷ்டையில்/<u>**மலத்தில்**</u> எவ்வளவு வெறுப்போ, அவ்வளவு வெறுப்பு எல்லா உலக விஷயங்களிலும் இருப்பதுதான் சுத்த வைராக்கியமாகும்.

<u>நித்திய-அநித்ய வஸ்து விவேகம்</u>

नित्यमात्म स्वरूपं हि दृश्यं तद्विपरीतगम्। एवं यो निश्चयः सम्यग्विवेको वस्तुनः स वै।।५।।

5) Atman (the seer) in itself is alone permanent, the seen is opposed to it (i.e., transient) – such a settled conviction is truly known as discrimination.

5) ஆத்ம ஸ்வரூபம்தான் நித்தியம். ஆத்மாவிற்கு விபரீதமான தன்மை உடையது அநித்தியம் ஆகும். இவ்விதம் திடமாக (உறுதியாக, நிச்சயமாக) தீர்மானம் ஏற்படுவதே 'வஸ்து விவேகம்' (பகுத்தறிவு) ஆகும்.

<u>சமாதி, ஷட்கம், சமம், தமம்</u>

सदैव वासना त्यागः शमोऽयमिति शब्दितः। निग्रहो बाह्य वृत्तीनां दम इत्यभिधीयते।।६।।

6) Abandonment of desires at all times is called Shama and the restraint of the external functions of the organs is called Dhama.

6) எப்பொழுதுமே வாசனைகளை (இச்சைகளை) விட்டு விடுதல் 'சமம்' என்று சொல்லப்படும். விருத்திகளை (எண்ண அலை) நிக்ரஹம் (control/restraint) செய்வது தமம் என கூறப்படும். (ஒரு தடவை அனுபவித்த விஷயத்தை மறுபடியும் அனுபவிக்க வேண்டும் என்ற ஆசையைத் தூண்டும் ஸம்ஸ்காரம் 'வாசனை' எனப்படும்.)

<u>உபரதி, திதிக்ஷை</u>

विषयेभ्यः परावृत्तिः परमोपरतिर्हि सा। सहनं सर्व दुःखानां तितिक्षा सा शुभा मता।।७।।

7) Turning away completely from all sense-objects is the height of Uparati, and patient endurance of all sorrow or pain is known as Titiksha, which is conducive to happiness.

7) விஷயங்களிலிருந்து திரும்புதல் சிலாக்கியமான (சிறந்த, உயர்ந்த, உத்தமமான) 'உபரதி' ஆகும். எல்லா துக்கங்களையும் பொறுத்துக் கொள்ளுதல் சுபமான 'திதிக்ஷை' என்று கூறப்படுகிறது.

<u>ச்ரத்தை, ஸமாதானம்</u>

निगमाचार्य वाक्येषु भक्तिः श्रद्धेति विश्रुता। चित्तैकाग्र्यं तु सल्लक्ष्ये समाधानमिति स्मृतम्।।८।।

8) Implicit faith in the words of the Vedas and the teachers (who interpret them) is known as Shraddha, and concentration of the mind on the only object Sat (i.e., Brahman) is regarded as Samadhana.

8) வேத வாக்கியங்களிலும் குருவின் வார்த்தைகளிலும் உள்ள விசுவாசம் 'ச்ரத்தை' என்று கூறப்படுகிறது. 'ஸத்' அல்லது

பிரஹ்மமாகிய குறியில் மனதை ஒரு முகமாக நிலை நிறுத்துதல் 'ஸமாதானம்' என்று கூறப்படுகிறது.

<u>முமுக்ஷுத்வம்</u>

संसार बन्ध निर्मुक्तिः कथं स्यान्मे दयानिधे। इति या सुदृढा बुद्धि र्वक्तव्या सा मुमुक्षुता।।९।।

9) When and how shall I, O Lord, be free from the bonds of this world (i.e., births and deaths) – such a burning desire is called Mumukshutha.

9) ஸம்ஸாரமாகிய (அனைத்து உலக பந்தங்களிலிருந்து) கட்டிலிருந்து எனக்கு எப்படி ஹே தயாநிதே, விடுதலை கிடைக்கும் என்ற திடமான (உறுதியான, நிச்சயமான) நம்பிக்கை எதுவோ அதை முமுக்ஷுதா (தீவிர மோக்ஷ வேட்கை, ஆவல்) என்று சொல்ல வேண்டும்.

<u>தத்துவ விசாரம்</u>

उक्त साधन युक्तेन विचारः पुरुषेण हि। कर्तव्यो ज्ञान सिद्ध्यर्थमात्मनः शुभमिच्छता।।१०।।

10) Only that person, who is in possession of the said qualification (as means to Knowledge) should constantly reflect with a view to attaining Knowledge, desiring his own good.

10) மேல் கூறப்பட்ட (விவேகம், வைராக்கியம், சம ஆதி ஷட்கம், முமுக்ஷுதா ஆகிய) சாதனங்களோடு கூடிய மனிதன் தனது வேண்டுபவனாக ஞானம் ஸித்திப்பதற்காக ஆத்ம விசாரம் செய்ய வேண்டும்.

नोत्पद्यते विना ज्ञानं विचारेणान्यसाधनैः। यथा पदार्थ भानं हि प्रकाशेन विना क्वचित्।।११।।

11) Knowledge is not brought about by any other means than Vichara, just as an object is nowhere perceived (seen) without the help of light.

11) எவ்விதம் வெளிச்சமில்லாமல் போனால் பதார்த்தங்கள் பிரகாசிக்காதோ, அவ்விதமே, விசாரத்தை தவிர வேறு சாதனங்களினால் ஞானம் உண்டாகாது.

कोऽहं कथमिदं जातं को वा कर्तास्य विद्यते। उपादानं किमस्तीह विचारः सोऽयमीदृशः।।१२।।

12) Who am I ? How is this (world) created ? Who is its creator ? Of what material is this (world) made? This is the way of that Vichara (enquiry).

12) நான் யார்? இது (ஜகத், உலகம்) எப்படி ஏற்பட்டது? இதை உண்டு பண்ணியவராக யார் இருக்கிறார்? இது எதைக் கொண்டு செய்யப்பட்டு உள்ளது? இவ்விதம் ஆலோசிப்பதுதான் விசாரம்.

नाहं भूत गणो देहो नाहं चाक्ष गणस्तथा। एतद्विलक्षणः कश्चिद्विचारः सोऽयमीदृशः।।१३।।

13) I am neither the body, a combination of the (five) elements (of matter), nor am I an aggregate of the senses; I am something different from these. This is the way of that Vichara.

13) பஞ்ச பூதங்களின் கூட்டமான இந்த சரீரம் நான் அல்ல. அப்படியே இந்திரியங்களின் கூட்டமும் நான் அல்ல. இவைகளுக்கு எல்லாம் மாறுபட்ட லக்ஷணத்தோடு கூடிய ஒருவனே நான். இவ்விதம் ஆலோசிப்பதுதான் விசாரம்

अज्ञान प्रभवं सर्वं ज्ञानेन प्रविलीयते। संकल्पो विविधः कर्ता विचारः सोऽयमीदृशः।।१४।।

14) Everything is produced by ignorance, and dissolves in the wake of Knowledge. The various thoughts

(modifications of Anthahkaranam) must be the creator. Such is this Vichara.

14) "எல்லாம் அக்ஞானத்தினால் ஏற்பட்டவை (தோன்றியவை). ஞானம் ஏற்பட்டவுடன் இவை எல்லாம் நன்றாக மறைந்து விடும். பல விதமான ஸங்கற்பங்களே எல்லாவற்றையும் உண்டு பண்ணுகிறது" இவ்விதம் ஆலோசிப்பதுதான் விசாரம்.

एतयोर्यदुपादानमेकं सूक्ष्मं सदव्ययम्। यथैव मृद्घटादीनां विचारः सोऽयमीदृशः।।१५।।

15) The material (cause) of these two (i.e., ignorance and thought) is the One (without a second), subtle (not apprehended by the senses) and unchanging Sat (Existence), just as the earth is the material (cause) of the pot and the like. This is the way of that Vichara.

15) இவ்விரண்டிற்கும் உபாதானமாக இருப்பது ஒன்றாகவும் ஸூக்ஷ்மமாகவும் ஸத்தாகவும் குறைவற்றதாகவும் இருக்கும். குடம் முதலானவைகளுக்கு, மண் எப்படி உபாதானமோ, அப்படியே. இவ்விதம் ஆலோசிப்பதுதான் விசாரம்

अहमेकोऽपि सूक्ष्मश्च ज्ञाता साक्षी सदव्ययः। तदहं नात्र संदेहो विचारः सोऽयमीदृशः।।१६।।

16) As I am also the One, the Subtle, the Knower, the Witness, the Ever-Existent, and the Unchanging, so there is no doubt that I am "That" (i.e., Brahman). Such is this enquiry.

16) நான் ஒருவனாகவும் ஸூக்ஷ்மனாகவும் அறிபவனாகவும் சாட்சியாகவும் (ஸாக்ஷியாகவும்) குறைவற்ற ஸத்ரூபனாகவும் இருக்கிறேன். நான் மேல் கூறப்பட்ட ஜகத்தின் உபாதான காரணமான பரமாத்மாதான். இதில் சந்தேஹம் (ஸந்தேஹம், சங்கை, ஐயம்) இல்லை. ஜகத் காரண வஸ்து, எப்படி ஒன்றாகவும் சூக்ஷ்மமாகவும் அறிகிறனாகவும் சாட்சியாகவும் (ஸாக்ஷியாகவும்) ஸத்தாகவும் அவ்யயமாகவும் இருக்கிறதோ,

அப்படியே நானும் இருப்பதால் நானேதான் அவர் (அந்த பரமாத்மா). இவ்விதம் ஆலோசிப்பதுதான் விசாரம்

<u>அக்ஞான ஸ்வரூபம்</u>

आत्मा विनिष्कलो ह्येको देहो बहुभिरावृतः। तयोरैक्यं प्रपश्यन्ति किमज्ञानमतः परम्।।१७।।

17) Atman is verily one and without parts, whereas the body consists of many parts; and yet the people see (confound, mistake, confuse) these two as one ! What else can be called ignorance but this?

17) ஆத்மா எவ்விதப் பிரிவும் அற்று ஒருவராக இருப்பவர், தேஹமோ பலவித வேறுபாடுகளுடன் பலவாக உள்ளது. அப்படி இருந்தும் இவ்விரண்டையும் ஒருமைப்படுத்தி பார்க்கிறார்கள். இதை விடப் பெரிய அக்ஞானம் வேறு உண்டா?

आत्मा नियामङ्ग श्चान्तर्देहो नियम्य बाह्यकः। तयोरैक्यं प्रपश्यन्ति किमज्ञानमतः परम्।।१८।।

18) Atman is the ruler of the body and is internal, the body is the ruled and is external; and yet, the people see (confound) these two as one! What else can be called ignorance but this?

18) ஆத்மா ஏவுகிறவர், உள்ளே இருப்பவர். தேஹமோ ஏவப்படும் பதார்த்தம், வெளியில் உள்ளது. இருந்தும் அவ்விரண்டையும் ஒன்றாகப் பார்க்கிறார்கள். இதை விட வேறு அக்ஞானம் என்ன உண்டு?

आत्मा ज्ञान मयः पुण्यो देहो मांस मयोऽशुचिः। तयोरैक्यं प्रपश्यन्ति किमज्ञानमतः परम्।।१९।।

19) Atman is all consciousness and holy, the body is all flesh and impure; and yet, the people see

(mistake) these two as one! What else can be called ignorance but this?

19) ஆத்மா ஞான ஸ்வரூபம், தேஹமோ மாம்ஸத்தால் செய்யப்பட்டது, அசுத்தமானது, அப்படி இருந்தும் அவ்விரண்டையும் ஒன்றாகப் பார்க்கிறார்கள். இதை விட வேறு அக்ஞானம் என்ன உண்டு?

आत्मा प्रकाशकः स्वच्छो देहस्तामस उच्यते। तयोरैक्यं प्रपश्यन्ति किमज्ञानमतः परम्।।२०।।

20) Atman is the (supreme) Illuminator and purity itself; the body is said to be of the nature of darkness; and yet, the people see (mistake) these two as one! What else can be called ignorance but this?

20) ஆத்மா விளங்க வைப்பவர், நன்கு தெளிவானவர், தேஹமோ இருட்டு மயமானது என்று கூறப்படுகிறது. அப்படி இருந்தும், அவ்விரண்டையும் ஒன்றாகப் பார்க்கிறார்கள். இதை விட வேறு அக்ஞானம் என்ன உண்டு?

आत्मा नित्यो हि सद्रूपो देहोऽनित्यो ह्यसन्मयः। तयोरैक्यं प्रपश्यन्ति किमज्ञानमतः परम्।।२१।।

21) Atman is eternal, since it is Existence itself; the body is transient, as it is non-existence in essence; and yet the people see (mistake) these two as one ! What else can be called ignorance but this?

21) ஆத்மா நித்தியர், ஸத் ஸ்வரூபர், தேஹமோ அநித்தியம், அஸத்திய ஸ்வரூபம், அப்படி இருந்தும், அவ்விரண்டையும் ஒன்றாகப் பார்க்கிறார்கள். இதை விட வேறு அக்ஞானம் என்ன உண்டு?

आत्मनस्तत्प्रकाशत्वं यत्पदार्थावभासनम्। नाग्न्यादिदीप्तिवद्दीप्तिर्भवत्यान्ध्यं यतो निशि।।२२।।

22) The luminosity of Atman consists in the manifestation of all objects. Its luminosity is not like that of fire or any such thing, for (in spite of the presence of such lights), darkness prevails at night (at some place or other).

22) மற்ற பதார்த்தங்களை தெரியும்படி செய்வதே ஆத்மாவின் பிரகாசத்தன்மை தான். ஆனால், அந்தப் பிரகாசம் அக்னி முதலானவைகளின் பிரகாசம் போன்றதல்ல (அவைகளில்லாவிட்டால்) இரவில் (ராத்திரியில்) இருட்டு ஆகி விடுகிறது. (ஆத்மா எப்பொழுதும் இல்லையென்று ஆகாததினால், அதன் பிரகாசம் எப்பொழுதும் குன்றாது (குறையாது, மங்காது).

देहोऽहमित्ययं मूढो मत्वा तिष्ठत्यहो जनः। ममायमित्यपि ज्ञात्वा घटद्रष्टेव सर्वदा।।२३।।

23) How strange is it that a person ignorantly rests contented with the idea that he is the body, while he knows it as something belonging to him (and therefore, apart/**separate** from him), even as a person who sees a pot (knows it as apart from him)!

23) குடத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றவன் போல் ''இது என்னுடைய சரீரம் எப்பொழுதும் தெரிந்து கொண்டிருக்கும்போதே, இந்த மூடனான மனிதன் ''நான் சரீரம்'' என்று நினைத்துக் கொண்டு நிற்கின்றானே, என்ன ஆச்சரியம்!

ஞான ஸ்வரூபம்

ब्रह्मैवाहं समः शान्तः सच्चिदानन्दलक्षणः। नाहं देहो ह्यसद्रूपो ज्ञानमित्युच्यते बुधैः।।२४।।

24) I am verily Brahman, being equanimous, quiescent, and by nature absolute Existence, Knowledge, and Bliss. I am

not the body, which is non-existence itself. This is called true Knowledge by the wise.

24) ''நான் பிரஹ்மமே, ஸமமானவன், சாந்தன், ஸத்தாகவும் சித்தாகவும் ஆனந்தமாகவும் இருக்கும் தன்மை உள்ளவன். நான் அஸத்திய ஸ்வரூபமாக இருக்கும் தேஹமல்ல'' என்று உணர்வதையே ஞானமென்று அறிவாளிகள் சொல்கிறார்கள்.

निर्विकारो निराकारो निरवद्योऽहमव्ययः। नाहं देहो ह्यसद्रूपो ज्ञानमित्युच्यते बुधैः।।२५।।

25) I am without any change, without any form, free from all blemish and decay. I am not the body, which is non-existence itself. This is called true Knowledge by the wise.

25) ''நான் மாறுதலற்றவன், உருவமற்றவன், தோஷமற்றவன், குறைவற்றவன், அஸத்திய ஸ்வரூபமாக இருக்கும் தேஹம் நான் அல்ல'' என்பதே ஞானமென்று அறிவாளிகளால் சொல்லப்படுகிறது.

निरामयो निराभासो निर्विकल्पोऽहमाततः। नाहं देहो ह्यसद्रूपो ज्ञानमित्युच्यते बुधैः।।२६।।

26) I am not subjected to any disease, I am beyond all comprehension, free from all alternatives and all-pervading. I am not the body, which is non-existence itself. This is called true Knowledge by the wise.

26) ''நான் வியாதியற்றவன், தோற்றமற்றவன், ஸந்தேஹிக்க இடம் அற்றவன், எங்கும் பரவி இருப்பவன், இருப்பவன். நான் அஸத்திய ஸ்வரூபமாக இருக்கும் தேஹம் அல்ல'' இதுவே ஞானமென்று அறிவாளிகளால் சொல்லப்படுகிறது

निर्गुणो निष्क्रियो नित्यो नित्यमुक्तोऽहमच्युतः। नाहं देहो ह्यसद्रूपो ज्ञानमित्युच्यते बुधैः।।२७।।

27) I am without any attribute or activity, I am eternal, ever free, and imperishable. I am not the body, which is non-existence itself. This is called true Knowledge by the wise.

27) "நான் குணமற்றவன், கிரியையற்றவன் (கருமமில்லாதவன்), நித்தியன், எப்பொழுதுமே முக்தன் (பந்தங்களில்லாதவன்) நழுவாதவன், நான் அஸத் ரூபமான இருக்கும் தேஹம் அல்ல" என்பதே ஞானமென்று அறிவாளிகளால் சொல்லப்படுகிறது

निर्मलो निश्चलोऽनन्तः शुद्धोऽहमजरोऽमरः। नाहं देहो ह्यसद्रूपो ज्ञानमित्युच्यते बुधैः।।२८।।

28) I am free from all impurity, I am immovable, unlimited, holy, undecaying, and immortal. I am not the body, which is non-existence itself. This is called true Knowledge by the wise.

28) "நான் அழுக்கற்றவன், அசைவற்றவன், முடிவற்றவன், (முடிவில்லாதவன்), சுத்தன் (சுத்தமானவன், ஜரை (மூப்பு) அற்றவன், மரணம் அற்றவன். நான் அஸத் ரூபமான தேஹம் அல்ல" என்பதே ஞானமென்று அறிவாளிகளால் சொல்லப்படுகிறது.

<u>தேஹம் ஆத்மா அல்ல</u>

<u>(அ): பிரதிவாதி கேட்கிறான்:</u>

स्वदेहं शोभनं त्यक्त्वा पुरुषाख्यं च संमतम्। किं मूर्ख शून्यमात्मानं देहातीतं करोषि भो।।२९।।

29) O you ignorant one! Why do you assert the blissful, ever-existent Atman, which resides in your own body and is (evidently) different from it, which is known as Purusha and is established (by the Shruti as identical with Brahman), to be absolutely non-existent?

29) புருஷன் என்று அழைக்கப்படுவதாயும் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டதாகவும் அழகாகவும் இருக்கின்ற தன் தேஹத்தை விட்டு விட்டு ஏ அசடே, தேஹத்திற்கெல்லாம் அப்பாற்பட்டதாக இருக்கின்ற சூன்யத்தை ஆத்மாவாகச் செய்து விடப் பார்க்கிறீரா?

(அ)(:): வாதி பதில் கூறுகிறார்:

स्वात्मानं श्रृणु मूर्ख त्वं श्रुत्या युक्त्या च पूरुषम्। देहातीतं सदाकारं सुदुर्दर्शं भवादृशाम्।।३०।।

30) O you ignorant one! Try to know, with the help of Shruti and reasoning, your own Self, Purusha, which is different from the body, (not a void but) the very form of existence, and very difficult for persons like you to realize.

30) ஏ அசடே, உன்னுடைய ஆத்மாவைப் பற்றி வேதத்தின் மூலமாகவும் யுக்தியினாலும் சொல்கிறேன். கேள். புருஷன் என்கிற அந்த ஆத்மா தேஹங்களுக்கு அப்பாற்பட்டவர். ஸத்தையே ஸ்வரூபமாகவுடையவர். உங்களைப் போல் உள்ளவர்களால் எளிதில் அறியப்பட இயலாதவர்.

अहं शब्देन विख्यात क व स्थितः परः। स्थूलत्वान्नैकतां प्राप्तः कथं स्याद्देहकः पुमान्।।३१।।

31) The Supreme (Purusha) known as “I” (ego) is but one, whereas the gross bodies are many. So how can this body be Purusha ?

31) ‘நான்’ என்ற சப்தத்தினால் நன்கு பிரசித்தரானவர், ஒருவராகவே இருப்பவர், எல்லாவற்றிலும் மேலானவர், ஸ்தூல சரீரங்களோ (ஸ்தூல = வெளியில் தெரியும்/காணப்படும்/ தென்படும்/புலப்படும்) பலவாக உள்ளன. புருஷன் இந்த வெறுக்கத் தக்க தேஹமாக எப்படி இருக்க முடியும்?

अहं द्रष्टृतया सिद्धो देहो दृश्यतया स्थितः। ममायमिति निर्देशात्कथं स्याद्देहकः पुमान्।।३२।।

32) "I" (ego) is well established as the subject of perception, whereas the body is the object. This is learnt from the fact that, when we speak of the body, we say: "This is mine." So, how can this body be Purusha?

32) நான் பார்க்கிறவனாக இருப்பவன், தேஹம் பார்க்கப்படுவதாக இருக்கின்றது. தவிரவும்/ <u>மேலும்</u>, "இது என்னுடையது" என்று சுட்டிக் காட்ட முடிகிறது. அப்படி இருக்க புருஷன் இந்த வெறுக்கத் தக்க தேஹமாக எப்படி இருக்க முடியும்?

अहं विकारहीनस्तु देहो नित्यं विकारवान्। इति प्रतीयते साक्षात्कथं स्याद्देहकः पुमान्।।३३।।

33) It is a fact of direct experience that the "I" (Atman) is without any change, whereas the body is always undergoing changes. So how can this body be Purusha?

33) நான் ஒரு போதும் மாறுபாடு அடையாமல் ஒரே நிலையில் இருப்பவன், சரீரமோ எப்பொழுதும் மாறுதல் அடைந்து கொண்டே இருக்கிறது. இந்த விஷயம் நேரடியாக நமக்குத் தெரிகிறது. இத்தனை வித்தியாசங்கள் இருக்க, புருஷன் எப்படி தேஹமாக இருக்கக் கூடும்?

यस्मात्परमिति श्रुत्या तया पुरुष लक्षणम्। विनिर्णीतं विशुद्धेन कथं स्याद्देहकः पुमान्।।३४।।

34) Wise men have ascertained the (real) nature of Purusha from that Shruti text, "(There is nothing) higher than He (Purusha)," etc. So how can this body be Purusha ?

34) அந்த வேதத்தினால் "எதற்கு மேலாக (ஒன்றும் கிடையாதோ) என்று புருஷனுடைய லக்ஷணம் அதி சுத்த தன்மை என்று நன்கு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது. அந்த புருஷன் வெறுக்கத்தக்க தேஹமாக எப்படி இருக்க முடியும்?

सर्वं पुरुष वेति सूक्ते पुरुष संज्ञिते। अप्युच्यते यतः श्रुत्या कथं स्याद्देहकः पुमान्।।३५।।

35) Again, the Shruti has declared in the Purusha Sukta that "All this is verily the Purusha". So how can this body be Purusha?

35) புருஷ ஸூக்தத்திலும் வேதத்தினால் "இது எல்லாம் புருஷனே" என்று சொல்லியிருக்கின்ற போது, புருஷன் இந்த அல்ப தேஹமாக எப்படி இருக்க முடியும்?

असङ्गः पुरुषः प्रोक्तो बृहदारण्यकेऽपि च। अनन्तमलसंसृष्टः कथं स्याद्देहकः पुमान्।।३६।।

36) So also, it is said in Brihadaranyaka: "The Purusha is completely unattached." How can this body, wherein inhere innumerable impurities be the Purusha?

36) பிருஹதாரண்யக உபநிஷதத்திலும் "இந்த புருஷன் எவ்வித பற்றுதலும் அற்றவன்" என்று சொல்லப்பட்டிருக்கின்றான். எல்லையில்லாத மலங்களால் சேர்ந்து செய்யப்பட்டிருக்கின்ற இந்த வெறுக்கத் தக்க தேஹமாக, புருஷன் எப்படி இருக்க முடியும்?

तत्रैव च समाख्यातः स्वयं ज्योतिर्हि पूरुषः। जडः पर प्रकाश्योऽयं कथं स्याद्देहकः पुमान्।।३७।।

37) There again it is clearly stated that "the Purusha is self-illumined." So, how can the body which is inert (insentient) and illumined by an external agent be the Purusha?

37) அந்த பிருஹதாரண்யக உபநிஷதத்திலேயே "புருஷன் ஸ்வயம் ஜோதி ஸ்வரூபன்" என்று சொல்லப்பட்டிருக்கின்றான். ஜடமாகவும் வேறொன்றினால் விளக்கப்பட வேண்டியதாயும் இருக்கின்ற இந்த வெறுக்கத் தக்க தேஹமாக, புருஷன் எப்படி இருக்க முடியும்?

प्रोक्तोऽपि कर्म काण्डेन ह्यात्मा देहाद्विलक्षणः। नित्यश्च तत्फलं भुङ्क्ते देह पातादनन्तरम्।।३८।।

38) Moreover, the Karma-kanda also declares that the Atman is different from the body and permanent, as it endures even after the fall of the body and reaps the fruits of actions (done in this life).

38) வேதத்தில் உள்ள கர்ம காண்டத்தில் கூட தேஹத்தை விட வேறாக ஒரு ஆத்மா இருப்பதாகவும் தேஹம் விழுந்த பிறகு அந்த ஆத்மா அழிவற்றவனாக இருந்து கருமங்களின் பயன்களை அனுபவிப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால், தேஹத்தைக் காட்டிலும் ஆத்மா வேறு.

<u>லிங்க சரீரம் ஆத்மா அல்ல</u>

लिङ्गं चानेक संयुक्तं चलं दृश्यं विकारि च। अव्यापकमसद्रूपं तत्कथं स्यैत्पुमानयम्।।३९।।

39) Even the subtle body consists of many parts and is unstable. It is also an object of perception, is changeable, limited and non-existent by nature. So, how can this be the Purusha?

39) லிங்கமென்கிற ஸூக்ஷ்ம சரீரத்தில் பல வஸ்துக்கள் சேர்ந்திருக்கின்றன. அது அசைவுடையது, ஞானத்திற்கு விஷயமானது, மாறுதல் அடையக் கூடியது, வியாபகமல்லாதது, அஸத்திய ஸ்வரூபமானது. அந்த ஸூக்ஷ்ம சரீரம் எப்படி இந்த புருஷனாக இருக்க முடியும்?

एवं देहद्वयादन्य आत्मा पुरुष ईश्वरः। सर्वात्मा सर्वरूपश्च सर्वातीतोऽहमव्ययः।।४०।।

40) The immutable Atman, the substratum of the ego, is thus different from these two bodies, and is the Purusha, the Ishwara (the Lord of all), the Self of all; It is present in every form and yet, transcends them all.

40) இவ்விதம் (ஸ்தூல, ஸூக்ஷ்ம என்கிற) இரண்டு தேஹங்களுக்கும் வேறு பட்டவராக இருப்பவரே ஆத்மா. அவரே புருஷன், ஈசுவரர், எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக

இருப்பவர். எல்லா ரூபங்களையும் தரிப்பவர், எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவர், குறைவற்றவர். அவர்தான் நான்.

**ஜகத் பிரஹ்மத்தைத் தவிர வேறல்ல**

इत्यात्मदेहभानेन प्रपञ्चस्यैव सत्यता। यथोक्ता तर्कशास्त्रेण ततः किं पुरुषार्थता।।४१।।

41) Thus, the enunciation of the difference between the Atman and the body has (indirectly) asserted, indeed, after the manner of the Tarkashastra, the reality of the phenomenal world. But, what end of human life is served thereby?

41) இவ்விதம் ஆத்மா தேஹமாகத் தோன்றுவதனால் ஜகத் ஸத்தியம்தான் என்று தர்க்க சாஸ்திரத்தில் சொல்லப்படுகிறது. ஆனால், அதனால் புருஷார்த்தமான மோக்ஷம் ஸித்திக்குமா **(கிடைக்குமா)**?

इत्यात्मदेहभेदेन देहात्मत्वं निवारितम्। इदानीं देहभेदस्य ह्यसत्त्वं स्फुटमुच्यते।।४२।।

42) Thus, the view that the body is the Atman has been denounced, by the enunciation of the difference between the Atman and the body. Now, is clearly stated the unreality of the difference between the two.

42) இவ்விதம் ஆத்மா வேறு, தேஹம் வேறு என்ற காரணத்தால் தேஹமே ஆத்மா என்பது மறுக்கப்பட்டது. இப்பொழுது தேஹம் வேறு என்பதும் வாஸ்தவமில்லை/**உண்மையல்ல** என்று தெளிவாகச் சொல்லப்படுகிறது.

चैतन्यस्यैकरूपत्वाद् भेदो युक्तो न कर्हिचित्। जीवत्वं च मृषा ज्ञेयं रज्ज्वां सर्प ग्रहो यथा।।४३।।

43) No division in Consciousness is admissible, at any time, as it is always one and the same. Even the

individuality of the Jiva must be known as false, like the delusion of a snake in a rope.

43) சைதன்யம் (பிரக்ஞை/Consciousness) ஒரே விதமாக இருப்பதால் அதில் எப்பொழுதும் வேற்றுமை பொருந்தாது. ஆகையால், கயிற்றில் பாம்பு என்று எண்ணுவது எப்படி வாஸ்தவமில்லையோ, அப்படியே (சைதன்யத்தினிடத்தில்) ஜீவனாக இருக்கும் தன்மை பொய்/**உண்மையல்ல** என்று அறிய வேண்டும்.

रज्ज्वज्ञानात्क्षणेनैव यद्वद्रज्जुर्हि सर्पिणी। भाति तद्वच्चितिः साक्षाद्विश्वाकारेण केवला।।४४।।

44) As through the ignorance of the real nature of the rope, the very rope appears, in an instant, as a snake, so also, does pure Consciousness appear in the form of the phenomenal universe, without undergoing any change.

44) கயிற்றின் (**கயிற்றைப் பற்றிய**) அறியாமையால், ஒரே க்ஷணத்தில், அந்தக் கயிறு பாம்பு ரூபத்துடன் தோன்றுகின்றதோ, அப்படியேதான் தனித்த (சுத்தமான) சைதன்யம் நேர்/**ப்ரத்யக்ஷமாக** பிரபஞ்சமாகத் தோன்றுகின்றது.

उपादानं प्रपञ्चस्य ब्रह्मणोऽन्यन्न विद्यते। तस्मात्सर्व प्रपञ्चोऽयं ब्रह्मैवास्ति न चेतरत्।।४५।।

45) There exists no other material cause of this phenomenal universe, except Brahman. Hence, this whole universe is but Brahman and nothing else.

பிரபஞ்சத்திற்கு உபாதான காரணம் பிரஹ்மத்தைக் காட்டிலும்/**தவிர**, வேறு எதுவும் கிடையாது. ஆகையால், இந்த பிரபஞ்சமும் பிரஹ்மமேயாகும். பிரஹ்மத்தை அன்றி வேறல்ல.

व्याप्यव्यापकता मिथ्या सर्वमात्मेति शासनात्। इति ज्ञाते परे तत्त्वे भेदस्यावसरः कुतः।।४६।।

46) From such declaration (of the Shruti), as "All this is Atman," it follows that the idea of the pervaded and the pervading is illusory. This supreme truth being realized, where is the room for any distinction between the cause and the effect?

46) எல்லாமே ஆத்மா என்று (வேதத்தில்) சொல்லப்பட்டு இருக்கின்றபடியால் வியாபிக்கப்படுவது ஒன்று, வியாபித்து இருப்பது ஒன்று, என்ற வேற்றுமை வாஸ்தவமில்லை/ <u>உண்மையல்ல</u>.

श्रुत्या निवारितं नूनं नानात्वं स्व मुखेन हि। कथं भासो भवेदन्यः स्थिते चाद्वयकारणे।।४७।।

47) Certainly, the Shruti has directly denied manifoldness in Brahman. The Non-dual Cause being an established fact, how could the Phenomenal Universe be different from It?

47) வேதம் தன் வாயினாலேயே வேற்றுமையை நிச்சயமாக மறுத்திருக்கிறது. இரண்டற்றதான காரண வஸ்து இருக்கும் போது அதில் தோன்றும் தோற்றம் வேறாக இருக்க முடியும்?

दोषोऽपि विहितः श्रुत्या मृत्यो र्मृत्युं स गच्छति। इह पश्यति नानात्वं मायया वञ्चितो नरः।।४८।।

48) Moreover, the Shruti has condemned (the belief in variety) in the words: "The person who," being deceived by Maya, "sees variety in this (Brahman), goes from death to death."

48) மாயையினால் ஏமாற்றம் அடைந்த மனிதன் பிரஹ்மத்தினிடத்தில் வேற்றுமையைப் பார்த்தால் அவன் மரணத்திலிருந்து மரணத்தையே அடைகிறான் என்று வேதத்தினால் தோஷமும் கூட சொல்லப்பட்டு இருக்கின்றது.

ब्रह्मणः सर्व भूतानि जायन्ते परमात्मनः। तस्मादेतानि ब्रह्मैव भवन्तीत्यवधारयेत्।।४९।।

49) Inasmuch as all beings are born of Brahman, the Supreme Atman, they must be understood to be verily Brahman.

49) உண்டாவதெல்லாம் பரமாத்மாவான பிரஹ்மத்திலிருந்துதான் உண்டாகின்றன. ஆகையால், இவை யாவும் பிரஹ்மமேதான் என்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

ब्रह्मैव सर्वनामानि रूपाणि विविधानि च। कर्माण्यपि समग्राणि बिभर्तीति श्रुतिर्जगौ।।५०।।

50) The Shruti has clearly declared that Brahman alone is the substratum of all varieties of names, forms and actions.

50) எல்லாப் பெயர்களையும் பல விதமான ரூபங்களையும் எல்லாச் செயல்களையும் தாங்குவது பிரஹ்மம்தான் என்று வேதம் கூறுகிறது.

सुवर्णाज्जायमानस्य सुवर्णत्वं च शाश्वतम्। ब्रह्मणो जायमानस्य ब्रह्मत्वं च तथा भवेत्।।५१।।

51) Just as a thing made of gold ever has the nature of gold, so also a being born of Brahman has always the nature of Brahman.

51) தங்கத்தினால் ஏற்பட்டது எப்படி எப்பொழுதும் தங்கமேதானோ, அப்படியே பிரஹ்மத்தினிடத்திலிருந்து உண்டானது எப்பொழுதும் பிரஹ்மமாகவேதான் இருக்கும்.

<u>ஜீவனும் பிரஹ்மத்தைத் தவிர வேறல்ல</u>

स्वल्पमप्यन्तरं कृत्वा जीवात्मपरमात्मनोः। योऽवतिष्ठति मूढात्मा भयं तस्याभिभाषितम्।।५२।।

52) Fear is attributed to the ignorant one who rests after making even the slightest distinction between the Jivatman and the Paramatman.

52) ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் வேற்றுமையை கொஞ்சமேனும்/**<u>சிறிதேனும்</u>** ஒரு மூடன்/**<u>முட்டாள்/மடையன்</u>**

செய்து கொண்டிருப்பானேயானால் அவனுக்கு பயம்தான் என்று (வேதத்தில்) சொல்லப்பட்டு இருக்கின்றது.

यत्राज्ञानाद्भवेद्द्वैतमितरस्तत्र पश्यति। आत्मत्वेन यदा सर्वं नेतरस्तत्र चाण्वपि।।५३।।

53) When duality appears through ignorance, one sees another; but when everything becomes identified with the Atman, one does not perceive another even in the least.

53) எப்பொழுது அறியாமையால் இரண்டு என்று ஏற்படுகின்றதோ, அப்பொழுது ஒன்று மற்றொன்றைப் பார்க்கும், எப்பொழுது தானாகவே/**தன்மயமாகவே**, எல்லாம் தெரிகிறதோ, அப்பொழுது மற்றொன்று சிறிதளவும் கிடையாது.

यस्मिन्सर्वाणि भूतानि ह्यात्मत्वेन विजानतः। न वै तस्य भवेन्मोहो न च शोकोऽद्वितीयतः।।५४।।

54) In that state, when one realizes all as identified with the Atman, there arises neither delusion nor sorrow, in consequence of the absence of duality.

54) எப்பொழுது ஒருவன் எல்லாப் பொருட்களையும் தான் என்பதாகவே நன்றாக அறிகிறானோ, அப்பொழுது இரண்டாவதற்றவன் என்ற காரணத்தால் அவனுக்கு மோஹம் இருக்காது, சோகமும் இருக்காது.

अयमात्मा हि ब्रह्मैव सर्वात्मकतया स्थितः। इति निर्धारितं श्रुत्या बृहदारण्यसंस्थया।।५५।।

55) The Shruti in the form of the Brihadaranyaka has declared that this Atman, which is the Self of all, is verily Brahman.

55) இந்த ஆத்மா பிரஹ்மமேதான், எல்லா ஸ்வரூபமாகவும் இருப்பவர் என்று பிருஹதாரண்யக உபநிஷதத்தில் உள்ள வேத வாக்கியம் தீர்மானமாகச் சொல்கிறது.

अनुभूतोऽप्ययं लोको व्यवहारक्षमोऽपि सन्। असद्रूपो यथा स्वप्न उत्तरक्षणबाधतः।।५६।।

56) This world, though an object of our daily experience and serving all practical purposes, is, like the dream world, of the nature of non-existence, inasmuch as it is contradicted the next moment.
56) இந்த பிரபஞ்சம் அநுபவிக்கப் பட்ட போதிலும், வியவஹாரம் செய்ய முடிந்த போதிலும் ஸ்வப்னம்/**<u>கனவு</u>** போல் அஸத் ஸ்வரூபமே ஆகும், அடுத்த க்ஷணத்திலேயே பாதிக்கப்படுகிறதால்.

स्वप्नो जागरणेऽलीकः स्वप्नेऽपि न हि जागरः। द्वयमेव लये नास्ति लयोऽपि ह्युभयोर्न च।।५७।।

57) The dream (experience) is unreal, in waking, whereas the waking (experience) is absent in dream. Both, however, are non-existent in deep sleep which, again, is not experienced in either.
57) ஜாக்ரத்/**<u>விழிப்பு</u>** காலத்தில் ஸ்வப்னம் பொய், ஸ்வப்ன காலத்தில் ஜாக்ரத் பிரபஞ்சம் இல்லை. இரண்டுமே நல்ல தூக்கத்தில் (ஸுஷுப்தியில்) இல்லை. தூக்கமும் (ஸுஷுப்தியும்) மற்ற இரண்டு சமயங்களில் இல்லை.

त्रयमेवं भवेन्मिथ्या गुणत्रयविनिर्मितम्। अस्य द्रष्टा गुणातीतो नित्यो ह्येकश्चिदात्मकः।।५८।।

58) Thus, all the three states are unreal inasmuch as they are the creation of the three Gunas; but their witness (the reality behind them) is, beyond all Gunas, eternal, one, and is Consciousness itself.
58) இவ்விதம் (ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற) (மூன்று) முக்குணங்களால் ஏற்பட்ட (ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி என்கிற) இம்மூன்றும் பொய்யே ஆகும். இம்மூன்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறவர் குணங்களுக்கு மேல் பட்டவர், நித்தியர், ஒருவராக உள்ளவர், சைதன்ய (Consciousness) ஸ்வரூபர்.

यद्वन्मृदि घटभ्रान्तिं शुक्तौ वा रजतस्थितिम्। तद्वद्ब्रह्मणि जीवत्वं भ्रान्त्या पश्यति न स्वतः।।५९।।

59) Just as (after the illusion has gone) one is no more deluded to see a jar in earth or silver in the nacre, so does one no more see Jiva in Brahman when the latter is realized (as one's own self).

59) எப்படி மண்ணில் குடம் என்ற மயக்கத்தையும் கிளிஞ்சலில் வெள்ளி இருப்பதாகவும் பார்க்கிறானோ, அதே மாதிரித்தான் பிராந்தியினால் பிரஹ்மத்தில் ஜீவத் தன்மையை காண்கிறான், தானாகப் பார்ப்பதில்லை.

यथा मृदि घटो नाम कनके कुण्डलाभिधा। शुक्तौ हि रजतख्यातिर्जीवशब्दस्तथा परे।।६०।।

60) Just as earth is described as a jar, gold as an ear-ring, and a nacre as silver, so is Brahman described as Jiva.

60) எவ்விதம் மண்ணாக இருப்பதில் குடம் என்கிற பெயரோ, தங்கத்தில் குண்டலம் என்கிற பெயரோ, கிளிஞ்சலில் வெள்ளியின் தோற்றமோ, அவ்விதம்தான் பர வஸ்துவில் (பரம் பொருள்), ஜீவன் என்கிற பெயர்.

<u>பிரபஞ்சம் தோற்றமே</u>

यथैव व्योम्नि नीलत्वं यथा नीरं मरुस्थले। पुरुषत्वं यथा स्थाणौ तद्वद्विश्वं चिदात्मनि।।६१।।

61) Just as blueness in the sky, water in the mirage, and a human figure in a post (are but illusory), so is the universe in Atman.

61) எப்படி ஆகாசத்தில் நீல வர்ணமும், கானல் வெளியில் எப்படி ஜலமும், எப்படி பட்ட மரத்தில் மனிதனும், தோன்றுகின்றதோ, அப்படியேதான் சைதன்ய ஸ்வரூபரான ஆத்மாவில் தோன்றுகின்றது.

यथैव शून्ये वेतालो गन्धर्वाणां पुरं यथा। यथाकाशे द्विचन्द्रत्वं तद्वत्सत्ये जगत्स्थितिः।।६२।।

62) Just as the appearance of a ghost in an empty place, of a castle in the air, and of a second moon in the sky (is illusory), so is the appearance of the universe in Brahman.

62) ஒன்று இல்லாத இடத்தில் வேதாளம் தோன்றுவது போலும், அப்படியே கந்தர்வ நகரம் தோன்றுவது போலும், ஆகாசத்தில் இரண்டு சந்திரன்கள் இருப்பதாகத் தோன்றுவது போலுமே ஸத்தியமான பிரஹ்மத்தில் பிரபஞ்சத்தின் இருப்பு.

यथा तरङ्गकल्लोलैर्जलमेव स्फुरत्यलम्। पात्ररूपेण ताम्रं हि ब्रह्माण्डौघैस्तथात्मता।।६३।।

63) Just as it is water that appears as ripples and waves, or again, it is copper, that appears in the form of vessel, so, it is Atman that appears as the whole universe.

63) எப்படி ஜலமே சிறிய அலைகளாகவும் பெரிய அலைகளாகவும் நன்றாகத் தோன்றுகின்றதோ, எப்படி தாமிரம்தான் செப்பு பாத்திரமாகவும் தோன்றுகின்றதோ, அப்படியே பிரஹ்மாண்டக் கூட்டங்களாக தோன்றுவதும் ஆத்ம தத்துவம் தான்.

घटनाम्ना यथा पृथ्वी पटनाम्ना हि तन्तवः। जगन्नाम्ना चिदाभाति ज्ञेयं तत्तदभावतः।।६४।।

64) Just as it is earth that appears under the name of a jar, or it is threads that appear under the name of a cloth, so, it is Atman that appears under the name of the universe. This Atman is to be known by negating the names.

64) மண் தான் குடம் என்ற பெயருடன் தோன்றுகின்றது. நூல்கள் தான் வஸ்திரம் (**துணி, ஆடை, உடை**) என்ற பெயருடன் தோன்றுகின்றது. அப்படியே, சைதன்யம் தான் ஜகத் என்ற பெயருடன் தோன்றுகின்றது. அதது/**அது அது** இல்லாத காரணத்தினால் அறியக் கூடியது (மண்

இல்லையானால் குடம் இல்லை, நூல் இல்லையானால் வஸ்திரம் இல்லை, அப்படியே சைதன்யம் (Consciousness) இல்லையானால் ஜகத் இல்லை.)

सर्वोऽपि व्यवहारस्तु ब्रह्मणा क्रियते जनैः। अज्ञानान्न विजानन्ति मृदेव हि घटादिकम्।।६५।।

65) People perform all their actions in and through Brahman, (but, on account of ignorance, they are not aware of that), just as, through ignorance, persons do not know that jars and other earthenwares are nothing, but earth.

65) ஜனங்களால் செய்யப்படும் எல்லா வியவஹாரமும் பிரஹ்மத்துடன்தான் செய்யப்படுகிறது. அறியாமையினால், இதை அவர்கள் உணர்வதில்லை. குடம் முதலான யாவையும் மண் தானே, அல்லவா?

कार्यकारणता नित्यमास्ते घटमृदोर्यथा। तथैव श्रुतियुक्तिभ्यां प्रपञ्चब्रह्मणोरिह।।६६।।

66) Just as there ever exist the relation of cause and effect between earth and a jar, so, does the same relation exist between Brahman and the phenomenal world; this has been established here, on the strength of scriptural texts and reasoning.

66) எவ்விதம் குடம் காரியம், மண் காரணம் என்ற ஸ்திதி/**நிலை** தவறாமல் இருக்கின்றதோ, அப்படியே, பிரபஞ்சத்திற்கும் பிரஹ்மத்திற்கும் சம்பந்தம் என்பது வேதத்தினாலும் யுக்தியினாலும் ஸித்திக்கிறது.

गृह्यमाणे घटे यद्वन्मृत्तिका भाति वै बलात्। वीक्ष्यमाणे प्रपञ्चेऽपि ब्रह्मैवाभाति भासुरम्।।६७।।

67) Just as (the consciousness of) earth forces itself upon our mind, while thinking of a jar, so also, does (the idea of) ever-shining Brahman flash on us, while contemplating on the phenomenal world.

67) குடத்தை அறியும் போது, எப்படி மண்ணும் கட்டாயமாகப் பிரகாசிக்கிறதோ, அப்படியே ஜகத் பார்க்கப்படும் போது, பிரஹ்மம்தான் விளக்கமாகத் தெரிகிறது.

सदैवात्मा विशुद्धोऽपि ह्यशुद्धो भाति वै सदा। यथैव द्विविधा रज्जुर्ज्ञानिनोऽज्ञानिनोऽनिशम्।।६८।।

68) Atman, though ever pure (to a wise man), always appears to be impure (to an ignorant one), just as a rope always appears in two different ways to a knowing person and an ignorant one.

68) (ஒரே விதமாக இருக்கும்) கயிறு அறிந்தவனுக்கு ஒரு விதமாகவும் அறியாதவனுக்கு வேறு விதமாகவும், ஆக இரு விதமாக இரவில் தோன்றுவது போலவே, எப்பொழுதும் சுத்தமாக இருக்கின்ற ஆத்மா எப்பொழுதும் அசுத்தமாக தோன்றுகின்றது.

<u>ஆத்மா தேஹமாகத் தோன்றுவது மோஹத்தால்</u>

यथैव मृन्मयः कुम्भस्तद्वद्देहोऽपि चिन्मयः। आत्मानात्मविभागोऽयं मुधैव क्रियते बुधैः।।६९।।

69) Just as a jar is all earth, so also, is the body all Consciousness. The division, therefore, into the Self and non-Self is made by the ignorant to no purpose.

69) எப்படி குடம் மண் மயமோ, அப்படியே தேஹமும் சின்மயம் (Consciousness). இவ்விதம் இருக்கையில், ஆத்மா வேறு அநாத்மா வேறு என்று வித்வான்கள்/**<u>பண்டிதர்கள்</u>** வீணாக வகுக்கிறார்கள்.

सर्पत्वेन यथा रज्जू रजतत्वेन शुक्तिका। विनिर्णीता विमूढेन देहत्वेन तथात्मता।।७०।।

70. Just as a rope is imagined to be a snake and a nacre to be a piece of silver, so is the Atman determined to be the body by an ignorant person.

70) நன்றாக மோஹம் அடைந்தவன் எப்படி கயிற்றை பாம்பு என்றும் கிளிஞ்சலை வெள்ளி என்றும் தீர்மானிக்கிறானோ, அப்படித்தான் ஆத்மாவை தேஹமென்று மூடன் தீர்மானிக்கிறான்.

घटत्वेन यथा पृथ्वी पटत्वेनैव तन्तवः। विनिर्णीता विमूढेन देहत्वेन तथात्मता।।७१।।

71) Just as earth is thought of as a jar (made of it) and threads, as a cloth, so, is Atman, determined to be the body, by an ignorant person.

71) எப்படி மண்ணே குடமாகவும் நூல்களே வஸ்திரமாகவும் மூடனால் தீர்மானிக்கப் படுகிறதோ, அப்படியேதான் மூடனால் ஆத்மா தேஹமாக தீர்மானிக்கப் படுகிறது.

कनकं कुण्डलत्वेन तरङ्गत्वेन वै जलम्। विनिर्णीता विमूढेन देहत्वेन तथात्मता।।७२।।

72) Just as gold is thought of as an ear-ring and water as waves, so, is the Atman, determined to be the body, by an ignorant person.

72) தங்கத்தையே குண்டலமாகவும் ஜலத்தையே அலைகளாகவும் மூடன் தீர்மானிக்கிறான். அப்படியேதான் மூடன் ஆத்மாவை தேஹமென்று தீர்மானிக்கிறான்.

पुरुषत्वेन वै स्थाणुर्जलत्वेन मरीचिका। विनिर्णीता विमूढेन देहत्वेन तथात्मता।।७३।।

73) Just as the stump of a tree is mistaken for a human figure and a mirage for water, so, is the Atman determined to be the body, by an ignorant person.

73) கட்டையையே மனுஷ்யனாகவும் கானலையே ஜலமாகவும் மூடன் தீர்மானிக்கிறான். அப்படியேதான் மூடன் ஆத்மாவை தேஹமென்று தீர்மானிக்கிறான்.

गृहत्वेनैव काष्ठानि खड्गत्वेनैव लोहता। विनिर्णीता विमूढेन देहत्वेन तथात्मता।।७४।।

74) Just as a mass of wood work is thought of as a house and iron as a sword, so, is the Atman determined to be the body, by an ignorant person.

74) மரக் கட்டைகளையே வீடு என்றும் இரும்பைக் கத்தி என்றும் மூடன் தீர்மானிக்கிறான். அப்படியே மூடன் ஆத்மாவை தேஹமென்று தீர்மானிக்கிறான்.

<u>அக்ஞானம் தான் மோஹத்திற்கு காரணம்</u>

यथा वृक्षविपर्यासो जलाद्भवति कस्यचित्। तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः।।७५।।

75) Just as one sees the illusion of a tree on account of water, so does, a person on account of ignorance, see the Atman as the body.

75) ஒருவனுக்கு ஜலத்தினால் மரங்கள் தலை கீழாக இருப்பதாகத் தோன்றுவது போலவே, அறியாமையின் சேர்க்கையினால் ஆத்மாவிடத்தில் தேஹத்தைப் பார்க்கிறான்.

पोतेन गच्छतः पुंसः सर्वं भातीव चञ्चलम्। तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः।।७६।।

76) Just as to a person going in a boat everything appears to be in motion, so does one, on account of ignorance, see the Atman as the body.

76) ஓடத்தில்/**<u>கப்பலில்</u>** போகின்ற மனிதனுக்கு எல்லாமே அசைவுள்ளது போல் தோன்றும். அப்படியே தான் அறியாமையின் சேர்க்கையினால் ஆத்மாவிடத்தில் தேஹத்தன்மை தோன்றுகின்றது.

पीतत्वं हि यथा शुभ्रे दोषाद्भवति कस्यचित्। तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः।।७७।।

77) Just as to a person suffering from a defect (jaundice) white things appear as yellow, so does one on account of ignorance, see Atman as the body.

77) ஒருவனுக்கு கண்ணில் தோஷமிருந்தால் வெளுப்பாக இருக்கும் பொருளில் மஞ்சள் நிறம் தோன்றுகின்றது. அது போல, அக்ஞானத்தின் சேர்க்கையினால் ஆத்மாவிடத்தில் தேஹத்தன்மையைப் பார்க்கிறான்

चक्षुर्भ्यां भ्रमशीलाभ्यां सर्वं भाति भ्रमात्मकम्। तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः।।७८।।

78) Just as to a person with defective eyes everything appears to be defective, so does one, on account of ignorance, see the Atman as the body.

78) சுழலும் கண்களால் பார்க்கும் எல்லாமே சுழல்வதாகத் தோன்றும். அப்படியே, அக்ஞானத்தின் சேர்க்கையினால் ஆத்மாவிடத்தில் தேஹத்தன்மையைப் பார்க்கிறான்.

अलातं भ्रमणेनैव वर्तुलं भाति सूर्यवत्। तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः।।७९।।

79) Just as a firebrand, through mere rotation, appears circular like the sun, so does one, on account of ignorance, see the Atman as the body.

79) கொள்ளிக் கட்டை சுற்றுவதாலேயே, சூரியன் போல் வட்டமாகத் தோன்றுகின்றது. அப்படியே, அக்ஞானத்தின் சேர்க்கையினால் ஆத்மாவிடத்தில் தேஹத்தன்மையைப் பார்க்கிறான்.

महत्त्वे सर्ववस्तूनामणुत्वं ह्यतिदूरतः। तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः।।८०।।

80) Just as all things that are really large appear to be very small owing to great distance, so does, one, on account of ignorance, see the Atman as the body.

80) எல்லா வஸ்துக்களும் பெரியதாக இருந்த போதிலும் வெகு தூரத்தினால், சிறியதாகத் தோன்றும். அப்படியே, அக்ஞானத்தின் சேர்க்கையினால் ஆத்மாவிடத்தில் தேஹத் தன்மையைப் பார்க்கிறான்.

सूक्ष्मत्वे सर्ववस्तूनां स्थूलत्वं चोपनेत्रतः। तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः।।८१।।

81) Just as all objects that are very small, appear to be large, when viewed through lenses, so does, one, on account of ignorance, see the Atman, as the body.

81) எல்லா வஸ்துக்களும் ஸூக்ஷ்மமாக இருந்த போதிலும் மூக்குக் கண்ணாடி காரணமாக பெரியதாகத் தோன்றும். அப்படியே, அக்ஞானத்தின் சேர்க்கையினால் ஆத்மாவிடத்தில் தேஹத் தன்மையைப் பார்க்கிறான்.

काचभूमौ जलत्वं वा जलभूमौ हि काचता। तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः।।८२।।

82) Just as a surface of glass is mistaken for water, or vice versa, so does one, on account of ignorance, see the Atman as the body.

82) கண்ணாடித் தரையில் ஜலத் தன்மையும் ஜலமுள்ள இடத்தில் கண்ணாடித் தன்மையும் தோன்றும். அப்படியே, அக்ஞானத்தின் சேர்க்கையினால் ஆத்மாவிடத்தில் தேஹத் தன்மையைப் பார்க்கிறான்.

यद्वदग्नौ मणित्वं हि मणौ वा वह्निता पुमान्। तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः।।८३।।

83) Just as a person imagines a jewel in fire or vice versa, so does one, on account of ignorance, see the Atman as the body.

83) எப்படி ஒரு மனிதன் தணலில் ரத்னத் தன்மையையும் ரத்னத்தில் தணல் தன்மையையும் பார்க்கிறானோ, அப்படியே, அக்ஞானத்தின் சேர்க்கையினால் ஆத்மாவிடத்தில் தேஹத் தன்மையைப் பார்க்கிறான்.

अभ्रेषु सत्सु धावत्सु धावन्निव यथा शशी। तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः।।८४।।

84) Just as when clouds move, the moon appears to be in motion, so does one, on account of ignorance, see the Atman as the body.

84) வாஸ்தவமாக மேகங்கள் ஓடுகையில் சந்திரன் ஓடுவதாகத் தோன்றுவது போல், அக்ஞானத்தின் சேர்க்கையினால் ஆத்மாவிடத்தில் தேஹத் தன்மையைப் பார்க்கிறான்.

यथैव दिग्विपर्यासो मोहाद्भवति कस्यचित्। तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः।।८५।।

85) Just as a person through confusion loses all distinction between the different points of the compass, so does one, on account of ignorance, see the Atman as the body.

85) எவ்விதம் ஒருவனுக்கு மோஹத்தினால் திசைகள் மாறித் தோன்றுமோ, அப்படியே, அக்ஞானத்தின் சேர்க்கையினால் ஆத்மாவிடத்தில் தேஹத் தன்மையைப் பார்க்கிறான்.

यथा शशी जले भाति चञ्चलत्वेन कस्यचित्। तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः।।८६।।

86) Just as the moon (when reflected) in water appears to one as unsteady, so does one, on account of ignorance, see the Atman as the body.

86) ஜலம் அசையும்போது ஜலத்தில் சந்திரன் அசைவது போல் எப்படி ஒருவனுக்குத் தோன்றுமோ, அதே போல, அக்ஞானத்தின் சேர்க்கையினால் ஆத்மாவிடத்தில் தேஹத் தன்மையைப் பார்க்கிறான்.

एवमात्मनि नज्ञाते देहाध्यासो हि जायते। स वात्मा परिज्ञातो लीयते च परात्मनि।।८७।।

87) Thus, through ignorance arises in Atman, the delusion of the body, which, again, through Self-realization, disappears in the supreme Atman.

87) இவ்விதமாக, அவித்யையினால்/**அக்ஞானத்தினால்** ஆத்மாவிடத்தில், நான் தேஹம் என்கிற அத்யாஸம் (Superimposition) ஏற்படுகிறது. அந்த அத்யாஸம் ஆத்ம

ஸ்வரூபத்தை நன்கு அறிந்தவுடன் பரமாத்மாவிடம் மறைந்து விடுகிறது.

सर्वमात्मतया ज्ञातं जगत्स्थावरजङ्गमम्। अभावात्सर्वभावानां देहानां चात्मता कुतः।।८८।।

88) When the whole universe, movable and immovable, is known to be Atman, and thus the existence of everything else is negated, where is then any room to say that the body is Atman?

88) ஸ்தாவர ஜங்கமங்களடங்கிய எல்லா ஜகத்தும் ஆத்மாவாகவே அறியப்பட்டு விட்டது. அப்பொழுது எல்லா வஸ்துக்களும் (தனித்து) இருப்புள்ளவைகளில்லாததால் ஆத்மாவிற்கு தேஹத் தன்மை எப்படி வரும்?

आत्मानं सततं जानन्कालं नय महामते। प्रारब्धमखिलं भुञ्जन्नोद्वेगं कर्तुमर्हसि।।८९।।

89) O enlightened one, pass your time always contemplating on Atman, while you are experiencing all the results of Prarabdha; for, it ill becomes you to feel distressed.

89) ஏ, நல்ல புத்திசாலியே, இடைவிடாமல் ஆத்மாவை அறிந்து கொண்டு ப்ராரப்த கர்மாவினால் ஏற்படுவதை எல்லாம் அநுபவித்துக் கொண்டு காலத்தைக் கழி. எவ்விதப் பரபரப்பும் வேண்டாம்.

<u>ஞானிக்கு ப்ராரப்தமும் கிடையாது</u>

उत्पन्नेऽप्यात्मविज्ञाने प्रारब्धं नैव मुञ्चति। इति यच्छ्रूयते शास्त्रात्तन्निराक्रियतेऽधुना।।९०।।

90) The theory one hears of from the scripture, that Prarabdha does not lose its hold upon one even after the origination of the knowledge of Atman, is now being refuted.

90) ஆத்ம ஞானம் ஏற்பட்ட போதிலும் ப்ராரப்தம் (பூர்வ ஜன்ம கர்ம பலன்) விடுவதில்லை என்று சொல்லப்படுவதை சாஸ்திர பிரமாணத்தைக் கொண்டு இப்பொழுது நிராகரிக்கப்படுகிறது/ <u>**மறுக்கப்படுகிறது**</u>.

तत्त्वज्ञानोदयादूर्ध्वं प्रारब्धं नैव विद्यते। देहादीनामसत्यत्वाद्यथा स्वप्नः प्रबोधतः।।९१।।

91) After the origination of the knowledge of Reality, Prarabdha verily ceases to exist, inasmuch as the body and the like become non-existent; just as a dream does not exist on waking.

91) ஆத்ம தத்துவ ஞானம் ஏற்பட்ட பிறகு ப்ராரப்தம் கிடையவே கிடையாது. ஏனென்றால், தூக்கத்தில் இருந்து விழித்துக் கொண்ட பிறகு ஸ்வப்னம் எப்படி அஸத்தியமோ, அப்படியே ஞான தசையில், தேஹம் முதலானவை யாவும் அஸத்தியமே.

कर्म जन्मान्तरकृतं प्रारब्धमिति कीर्तितम्। तत्तु जन्मान्तराभावात्पुंसो नैवास्ति कर्हिचित्।।९२।।

92) That Karma, which is done in a previous life, is known as Prarabdha (which produces the present life). But such Karma cannot take the place of Prarabdha (for a man of knowledge), as he has no other birth (being free from ego).

92) முன்னொரு பிறவியில் செய்யப்பட்ட கர்மாவே ப்ராரப்தம் என்று சொல்லப்படுகிறது. ஆனால், ஞானியான புருஷனுக்கு முன்னொரு பிறவி என்பது கிடையாததினால், அவனுக்கு ப்ராரப்தமும் எப்படியும் இருக்காது.

स्वप्नदेहो यथाध्यस्तस्तथैवायं हि देहकः।। अध्यस्तस्य कुतो जन्म जन्माभावे स्थितिः कुतः।।९३।।

93) Just as the body in a dream is superimposed (and therefore illusory), so is also this body. How could there be any birth of the superimposed (body), and in the absence of

birth (of the body) where is the room for that (i.e., Prarabdha) at all?

93) எப்படி ஸ்வப்னத்தில் காணப்படும் தேஹம் கல்பிதமோ (கற்பனையோ), அப்படியே தான் இந்த அல்பமான ஜாக்ரத் தேஹமும். கல்பிதமான வஸ்துவிற்கு ஜன்மம் எப்படி வரும்? ஜன்மமே இல்லாமல் இருக்கையில் இருப்பு என்பது எங்கிருந்து வரும்?

उपादानं प्रपञ्चस्य मृद्भाण्डस्येव कथ्यते। अज्ञानं चैव वेदान्तैस्तस्मिन्नष्टे क्व विश्वता।।९४।।

94) The Vedanta texts declare ignorance to be verily the material (cause) of the phenomenal world just as earth is of a jar. That (ignorance) being destroyed, where can the universe subsist?

94) குடத்திற்கு எப்படி மண் உபாதான காரணமோ, அப்படியே பிரபஞ்சத்திற்கு உபாதான காரணம் அக்ஞானம் என்று வேதாந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த (உபாதான காரணமான) அக்ஞானம் நாசம் அடைந்த பிறகு பிரபஞ்சம் எங்கே இருக்க முடியும்?

यथा रज्जुं परित्यज्य सर्प गृह्णाति वै भ्रमात्। तद्वत्सत्यमविज्ञाय जगत्पश्यति मूढ धीः।।९५।।

95) Just as a person, out of confusion, perceives only the snake leaving aside the rope, so does, an ignorant person see only the phenomenal world, without knowing the reality.

95) கயிற்றை விட்டு விட்டு பிரமத்தினால் (பிரமை=மயக்கம், confusion) எவ்விதம் பாம்பை பார்க்கிறானோ, அதே மாதிரி, ஸத்தியமாக உள்ள பிரஹ்மத்தை அறிந்து கொள்ளாமல், மோஹத்தை அடைந்த புத்தியோடு கூடியவன் ஜகத்தைப் பார்க்கிறான்.

रज्जुरूपे परिज्ञाते सर्पभ्रान्तिर्न तिष्ठति। अधिष्ठाने तथा ज्ञाते प्रपञ्चः शून्यतां व्रजेत्॥९६॥

96) The real nature of the rope being known, the appearance of the snake no longer persists; so the substratum being known, the phenomenal world disappears completely.

96) கயிற்றின் ரூபம் அறியப்பட்டு விட்டால் பாம்பு என்கிற பிரமம் நிற்காது. அப்படியே, ஜகத்திற்கு அதிஷ்டானமாக உள்ள பிரஹ்மம் அறியப்பட்டு விட்டால் ஜகத் ஒன்றுமில்லாமல் ஆகி விடும்.

देहस्यापि प्रपञ्चत्वात्प्रारब्धावस्थितिः कुतः। अज्ञानिजनबोधार्थं प्रारब्धं वक्ति वै श्रुतिः॥९७॥

97) The body also being within the phenomenal world (and therefore unreal), how could Prarabdha exist? It is, therefore, for the understanding of the ignorant alone that the Shruti speaks of Prarabdha.

97) தேஹமும் பிரபஞ்சமேயானபடியால் ப்ராரப்தம் எப்படி நிலைக்கும்? ஆத்ம ஞானமில்லாத ஜனங்களுக்கு தெரிவிப்பதற்காகத்தான் வேதம் ப்ராரப்தத்தைப் பற்றி (உண்டு என்பது போல்) சொல்கிறது.

क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन्दृष्टे परावरे। बहुत्वं तन्निषेधार्थं श्रुत्या गीतं च वै स्फुटम्॥९८॥

98) "And all the actions of a man perish, when he realizes that (Atman) which is both the higher and the lower." Here, the clear use of the plural by the Shruti is intended to negate Prarabdha as well.

98) "மேலானதும் கீழானதும் ஆன (காரணமாகவும் காரியமாகவும் உள்ள) எல்லா பொருள்களாகவும் இருக்கும் அந்த பிரஹ்மத்தை சாக்ஷாத்காரம் செய்து விட்டால் அவனுடைய கர்மாக்கள் நசித்து விடும்" என்று வேதம்

தெளிவாகச் சொல்லியிருக்கிறது. (இந்த வாக்கியத்தில் கர்மாக்கள் என்று உபயோகித்திருக்கும் பன்மை அதை (ப்ராரப்த கர்மாவை) மறுப்பதற்காகத்தான். (ஸம்ஸ்கிருதத்தில் ஏக வசனம், த்விவசனம், பஹு வசனம், என்று மூன்று வசனங்கள் இருப்பதனால், பஹு வசனத்தினால் சொல்லப்படும் பதார்த்தம் குறைந்தது மூன்றாவது இருக்க வேண்டும். கர்மாக்கள் என்ற பஹு வசன சப்தத்தால் ஸஞ்சிதம், ஆகாமி, ப்ராரப்தம் என்கிற மூன்றையுமே கிரஹிக்க/அறிந்து கொள்ள வேண்டும். இல்லையானால், பஹு வசனத்திற்கு அர்த்தம் இல்லை என்றாகி விடும்

उच्यतेऽज्ञैर्बलाच्चैतत्तदानर्थद्वयागमः। वेदान्तमतहानं च यतो ज्ञानमिति श्रुतिः।।९९।।

99) If the ignorant still arbitrarily maintain this, they will not only involve themselves in two absurdities, but will also run the risk of foregoing the Vedantic conclusion. So, one should accept those Shrutis alone, from which proceeds true knowledge.

99) அறியாதவர்கள் பிடிவாதமாக அது (ப்ராரப்தம்) உண்டு என்று சொல்வார்களேயானால் அப்பொழுது இரண்டு வித அனர்த்தங்கள் வந்து சேரும். வேதாந்த ஸித்தாந்தங்களை கை விட்டதாக ஆகும். அதோடு கூட "யதோ ஞானம்" என்கிற வேத வாக்கியமும் (கை விடப் பட்டதாக ஆகும்).

<u>பதினைந்து ஞான அங்கங்கள்</u>

त्रिपञ्चाङ्गान्यथो वक्ष्ये पूर्वोक्तस्यैव सिद्धये। तैश्च सर्वैः सदा कार्यं निदिध्यासनमेव तु।।१००।।

100) Now, for the attainment of the aforesaid (knowledge), I shall expound the fifteen steps by the help of which one should practice profound meditation at all times.

முன் சொல்லப்பட்ட தத்துவ சாக்ஷாத்காரம் ஸித்திப்பதற்காகவே பதினைந்து அங்கங்களைப் 100) பற்றி இனி மேல் சொல்கிறேன். அவை எல்லாவற்றையும் சேர்த்துக்

கொண்டுதான் எப்பொழுதும் நிதித்யாஸனம் (ஆழ்ந்த தியானம் = profound meditation) செய்ய/ <u>**அப்பியசிக்க**</u> வேண்டும்.

नित्याभ्यासादृते प्राप्तिर्न भवेत्सच्चिदात्मनः। तस्माद्ब्रह्म निदिध्यासेज्जिज्ञासुः श्रेयसे चिरम्।।१०१।।

101) The Atman that is absolute existence and knowledge cannot be realized without constant practice. So, one seeking after knowledge, should long meditate upon Brahman for the attainment of the desired goal.

101) எப்பொழுதும் அப்பியாசம் செய்தால் ஒழிய ஸத்தாகவும் சித்தாகவும் உள்ள ஆத்மா கிட்டாது. ஆகையால், ஞானம் அடைய வேண்டும் என்று நினைக்கிறவன் சிரேயசை உத்தேசித்து வெகு காலம் பிரஹ்மத்தை அனுஸந்தானம் (தியானம் = meditate) செய்ய வேண்டும்.

यमो हि नियमस्त्यागो मौनं देशश्च कालतः। आसनं मूलबन्धश्च देहसाम्यं च दृक्स्थितिः।।१०२।।
प्राणसंयमनं चैव प्रत्याहारश्च धारणा। आत्मध्यानं समाधिश्च प्रोक्तान्यङ्गानि वै क्रमात्।।१०३।।

102-103) The steps, in order, are described as follows: the control of the senses, the control of the mind, renunciation, silence, space, time, posture, the restraining root (Mulabandha), the equipoise of the body, the firmness of vision, the control of the vital forces, the withdrawal of the mind, concentration, self-contemplation and complete absorption.

102-103) அந்த பதினைந்து அங்கங்கள் வரிசையாக சொல்லப்படுகிறது. 1) யமம் (control of the senses) 2) நியமம் (control of the mind) 3) தியாகம் (renunciation) 4) மௌனம் (silence) 5) தேசம் (space) 6) காலம் (time) 7) ஆஸனம் (posture) 8) மூலபந்தம் (restraining root) 9) தேஹ சாம்யம்

(equipoise of the body) 10) திருக் ஸ்திதி (equipoise of the body) 11) பிராண ஸம்யமனம் (control of the vital forces) 12) பிரத்யாஹாரம் (withdrawal of the mind) 13) தாரணை (concentration) 14) ஆத்ம தியானம் (self-contemplation) 15) சமாதி (complete absorption)

<u>யமம்</u>

सर्वं ब्रह्मेति विज्ञानादिन्द्रियग्रामसंयमः। यमोऽयमिति संप्रोक्तोऽभ्यसनीयो मुहुर्मुहुः।।१०४।।

104) The restraint of all the senses by means of such knowledge as "All this is Brahman" is rightly called Yama, which should be practiced again and again.

104) எல்லாம் பிரஹ்மமே என்ற அறிவினால் இந்திரியக் கூட்டத்தை அடக்குவதை யமம் என்று சொல்லப்படுகிறது. இதை அடிக்கடி அப்பியாசம் செய்ய வேண்டும்.

<u>நியமம்</u>

सजातीयप्रवाहश्च विजातीयतिरस्कृतिः। नियमो हि परानन्दो नियमात्क्रियते बुधैः।।१०५।।

105) The continuous flow of only one kind of thought to the exclusion of all other thoughts, is called Niyama, which is verily the supreme bliss and is regularly practiced by the wise.

105) ஒரே மாதிரியான பிரஹ்மாகார விருத்தியைத் தொடர்ந்து பிரவாஹம் போல் செய்வதும் விரோதமான விருத்திகளை தூரத் தள்ளுவதும் நியமம் ஆகும். இந்த நியமத்தால் அறிவாளிகளால் மேலான ஆனந்தம் அடையப் படுகிறது.

<u>தியாகம்</u>

त्यागः प्रपञ्चरूपस्य चिदात्मत्वावलोकनात्। त्यागो हि महतां पूज्यः सद्यो मोक्षमयो यतः।।१०६।।

106) The abandonment of the illusory universe by realizing it as the all-conscious Atman is the real renunciation honored by the great, since it is of the nature of immediate liberation.
106) பிரபஞ்சத்தின் வடிவம் சைதன்ய ஸ்வரூபமே என்று பார்ப்பதனால் பிரபஞ்சத்தின் வடிவத்தை விட்டு விடுவது **தியாகம்** ஆகும். இதிலிருந்தே உடனே அநேகமாக மோக்ஷம் ஏற்படுவதால் மஹான்கள் இதை மிகவும் புகழ்கிறார்கள்.

**மௌனம்**

यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह। यन्मौनं योगिभिर्गम्यं तद्भजेत्सर्वदा बुधः।।१०७।।
107) The wise should always be one with that silence wherefrom words together with the mind turn back without reaching it, but which is attainable by the Yogins.
107) "வாக்கு மனதோடு சேர்ந்து எதனிடம் போய் அடைய முடியாமல் திரும்புகின்றதோ, (அது பிரஹ்மம்)" என்று இருப்பதனால் மாத்திரம் அறியத்தக்க நிலை '**மௌனம்**' எனப்படும்.
அதை அறிவாளி எப்பொழுதும் சேவிக்க (சேவிக்க = respect, exercise, practice) வேண்டும்.

वाचो यस्मान्निवर्तन्ते तद्वक्तुं केन शक्यते। प्रपञ्चो यदि वक्तव्यः सोऽपि शब्दविवर्जितः।।१०८।।
इति वा तद्भवेन्मौनं सतां सहजसंज्ञितम्। गिरा मौनं तु बालानां प्रयुक्तं ब्रह्मवादिभिः।।१०९।।
108-109) Who can describe That (i.e., Brahman) whence words turn away ? (So silence is inevitable while describing Brahman). Or if the phenomenal world were to be described, even that is beyond words. This, to give an alternate definition, may also be termed silence known among the sages as congenital. The observance of silence

by restraining speech, on the other hand, is ordained by the teachers of Brahman for the ignorant.

108-109) எதிலிருந்து வாக்கு திரும்பி விடுகின்றதோ, அந்த பிரஹ்மத்தைப் பற்றி யாரால் சொல்ல முடியும்? ஜகத்/உலகத்தைப் பற்றி சொல்லலாமென்றால், அதுவும் இவ்விதம் என்று சொல்ல முடியாமல் அநிர்வசனீயமாக (Indescribable) இருப்பதால் சொல்வதற்கு வார்த்தைகள் இல்லை. இவ்விதமாகவும் ஸத் புருஷர்களுக்கு ஸஹஜமாகவும் (ஸஹஜம்=கூடப் பிறந்தது=congenital) என்று சொல்லப்படும் அந்த <u>**மௌனம்**</u> ஏற்படும். பாலர்களுக்காக (ஞானிகளாகாமல் அப்பியாச தசையின் ஆரம்பத்தில் இருப்பவர்களுக்காக பேச்சை அடக்குவது மௌனம் என்று பிரஹ்மத்தைப் பற்றி சொல்வோர்கள் விதித்திருக்கிறார்கள்.

<u>**தேசம்**</u>

आदावन्ते च मध्ये च जनो यस्मिन्न विद्यते। येनेदं सततं व्याप्तं स देशो विजनः स्मृतः।।११०।।

110) That solitude is known as space, wherein the universe does not exist in the beginning, end or middle, but whereby it is pervaded at all times.

110) முன்னும் பின்னும் எங்கே ஜனங்கள் கிடையாதோ, எதனால் இது எல்லாம் இடை இல்லாமல் வியாபிக்கப்பட்டு இருக்கின்றதோ, அதுவே ஜனமற்ற <u>**தேசம்**</u> என்று கருதப்படுகிறது.

<u>**காலம்**</u>

कलनात्सर्वभूतानां ब्रह्मादीनां निमेषतः। कालशब्देन निर्दिष्टो ह्यखण्डानन्द अद्वयः।।१११।।

111) The non-dual (Brahman) that is bliss indivisible is denoted by the word ‘time’, since it brings into existence, in the twinkling of an eye all beings from Brahman downwards.

111) பிரஹ்மா முதலான பிராணிகளை ஒரு கண் சிமிட்டினால் உண்டு பண்ணுவதனால் அகண்டமான ஆனந்த ஸ்வரூபியாக இரண்டாவதற்றதாக உள்ள பிரஹ்மம்தான் **காலம்** என்ற சப்தத்தினால் குறிப்பிடப்படுகிறது.

**ஆஸனம்**

सुखेनैव भवेद्यस्मिन्नजस्रं ब्रह्मचिन्तनम्। आसनं तद्विजानीयान्नेतरत्सुखनाशनम्।।११२।।

112) One should known that as real posture in which the meditation on Brahman flows spontaneously and unceasingly, and not any other that destroys one's happiness.

112) எப்படி இருந்தால் பிரஹ்மத்தைச் சிந்திப்பது சுகமாகவே இடைவிடாமல் ஏற்படுமோ, அதையே ஆஸனம் என்று அறிய வேண்டும். சுகத்தைக் கெடுக்கக் கூடிய வேறு எதுவும் ஆஸனம் ஆகாது.

सिद्धं यत्सर्वभूतादि विश्वाधिष्ठानमव्ययम्। यस्मिन्सिद्धाः समाविष्टास्तद्वै सिद्धासनं विदुः।।११३।।

113) That, which is well known as the origin of all beings and the support of the whole universe, which is immutable and, in which the enlightened are completely merged, that alone is known as Siddhasana (eternal Brahman).

113) எது எப்பொழுதும் ஸித்தமாக இருந்து கொண்டு உண்டாகிறவைகளுக்கு எல்லாம் காரணமாகவும் ஜகத்திற்கு அதிஷ்டானமாகவும் குறைவற்றதாகவும் இருக்கின்றதோ, எதிலேயே ஸித்த புருஷர்கள் நிலைத்திருக்கிறார்களோ, அதையே ஸித்த ஆஸனம் என்று அறிய வேண்டும்.

**மூலபந்தம்**

यन्मूलं सर्वभूतानां यन्मूलं चित्तबन्धनम्। मूलबन्धः सदा सेव्यो योगोऽसौ राजयोगिनाम्।।११४।।

114) That (Brahman) which is the root of all existence and on which the restraint of the mind is based is called the restraining root (Mulabandha) which should always be adopted since it is fit for Raja-yogins.

114) எது உண்டாகும் வஸ்துக்களுக்கு எல்லாம் வேரோ, எதை ஆதாரமாக வைத்துக் கொண்டு மனதை கட்டுப்படுத்த வேண்டுமோ, அந்த <u>மூலபந்தம்</u> தான் எப்பொழுதும் சேவிக்கத் தகுந்தது. அதுவே ராஜயோகம் அப்பியாசிப்பவர்களுக்கு மிகவும் உரித்தானது.

<u>தேஹ சாம்யம்</u>

अङ्गानां समतां विद्यात्समे ब्रह्मणि लीयते। नो चेन्नैव समानत्वमृजुत्वं शुष्कवृक्षवत्।।११५।।

115) Absorption in the uniform Brahman should be known as the equipoise of the limbs (Dehasamya). Otherwise, mere straightening of the body like that of a dried-up tree is no equipoise.

115) சமமான பிரஹ்மத்தில் லயம் (absorption) ஏற்படுமேயானால், அதை அங்கங்களின் (of the Limbs) சாம்யம் (Equipoise) அல்லது <u>தேஹ சாம்யம்</u> என்று அறிய வேண்டும். அப்படி பிரஹ்மத்தில் லயம் ஏற்படாமல் காய்ந்த மரம் போல் உடல் நேராக இருப்பது மட்டும் தேஹ சாம்யமாகாது.

<u>திருஷ்டி, திருக் ஸ்திதி</u>

दृष्टिं ज्ञानमयीं कृत्वा पश्येद्ब्रह्ममयं जगत्। सा दृष्टिः परमोदारा न नासाग्रावलोकनी।।११६।।

116) Converting the ordinary vision into one of knowledge one should view the world as Brahman itself. That is the noblest vision, and not that which is directed to the tip of the nose.

116) ஞான மயமான திருஷ்டியை ஏற்படுத்திக் கொண்டு அதனால் ஜகத்தை பிரஹ்ம மயமாக பார்ப்பதே சிலாக்கியமான (சிறந்த, உயர்ந்த, உத்தமமான) திருஷ்டி. மூக்கு நுனியை பார்த்துக் கொண்டு இருப்பது அல்ல.

द्रष्टृदर्शनदृश्यानां विरामो यत्र वा भवेत्। दृष्टिस्तत्रैव कर्तव्या न नासाग्रावलोकनी।।११७।।

117) Or, one should direct one's vision to That alone, where all distinction of the seer, sight, and the seen ceases and not to the tip of the nose.

117) பார்க்கிறவன், பார்வை, பார்க்கப்படும் வஸ்து (என்ற மூன்றும்) நிலையில் இல்லாமல் போய் விடுமோ, அதில் தான் திருஷ்டியை செலுத்த வேண்டும். மூக்கு நுனியை பார்ப்பது அல்ல.

<u>பிராண ஸம்யமனம்</u>

चित्तादिसर्वभावेषु ब्रह्मत्वेनैव भावनात्। निरोधः सर्ववृत्तीनां प्राणायामः स उच्यते।।११८।।

118) The restraint of all modifications of the mind by regarding all mental states like the Chitta as Brahman alone, is called Pranayama.

118) சித்தம் முதலான எல்லா பதார்த்தங்களும் பிரஹ்மம்தான் என்று பாவிப்பதனால் சகல விருத்திகளையும் அடக்குவது பிராணாயாமம் என்று சொல்லப்படுகிறது.

निषेधनं प्रपञ्चस्य रेचकाख्यः समीरणः। ब्रह्मैवास्मीति या वृत्तिः पूरको वायुरीरितः।।११९।।

ततस्तद्वृत्ति नैश्चल्यं कुम्भकः प्राणसंयमः। अयं चापि प्रबुद्धानामज्ञानां घ्राण पीडनम्।।१२०।।

119-120) The negation of the phenomenal world is known as Rechaka (breathing out), the thought, "I am verily Brahman", is called Puraka (breathing in), and the

steadiness of that thought thereafter is called Kumbhaka (restraining the breath). This is the real course of Pranayama for the enlightened, whereas the ignorant only torture the nose.

119-120) பிரபஞ்சத்தை இல்லை என்று தள்ளுவது ரேசகம் என்ற வாயு ஆகும். நான் பிரஹ்மம் தான் என்ற விருத்தி பூரகம் என்ற வாயு என்று சொல்லப்படுகிறது. அதன் பிறகு, ரேசக பூரகங்களுக்குப் பின், அந்த விருத்திகளை அசையாமல் இருக்கச் செய்வது கும்பகம் என்ற பிராணாயாமம் ஆகும். (இப்பொழுது சொல்லிக் கொண்டு வந்த) இந்த விதம் ஞானிகளுக்குத்தான். அக்ஞானிகளுக்கு பிராண சஞ்சாரத்தை நிரோதம் செய்வதே/ **<u>அடக்குவதே</u>** பிராணாயாமம் ஆகும்.)

<u>பிரத்யாஹாரம்</u>

विषयेष्वात्मतां दृष्ट्वा मनसश्चिति मज्जनम्। प्रत्याहारः स विज्ञेयोऽभ्यसनीयो मुमुक्षुभिः।।१२१।।

121) The absorption of the mind in the Supreme Consciousness by realizing Atman in all objects is known as Pratyahara (withdrawal of the mind) which should be practiced by the seekers after liberation.

121) விஷயங்களும் ஆத்மாவே என்று உணர்ந்து மனதை சைதன்யத்தில் மூழ்கும்படி செய்வது பிரத்யாஹாரம் என்று அறிய வேண்டும். இதை மோக்ஷத்தில் ஆசை உள்ளவர்கள் அப்பியாசம் செய்ய வேண்டும்.

<u>தாரணை</u>

यत्र यत्र मनो याति ब्रह्मणस्तत्र दर्शनात्। मनसो धारणायैव धारणा सा परा मता।।१२२।।

122) The steadiness of the mind through realization of Brahman wherever the mind goes, is known as the supreme Dharana (concentration).

122) எங்கே எங்கேயெல்லாம் மனம் போகின்றதோ, அங்கே அங்கேயெல்லாம் பிரஹ்மமே காணப்படுவதால் மனதை நிலைக்கச் செய்தலே உத்தமமான தாரணை என்று கருதப்படுகிறது.

<u>ஆத்ம தியானம்</u>

ब्रह्मैवास्मीति सद्वृत्त्या निरालम्बतया स्थितिः। ध्यान शब्देन विख्याता परमानन्द दायिनी।।१२३।।

123) Remaining independent of everything as a result of the unassailable thought, "I am verily Brahman," is well known by the word Dhyana (meditation), and is productive of supreme bliss.

123) நான் பிரஹ்மம் தான் என்ற சத்தியமான விருத்தியுடன் வேறொன்றையும் அவலம்பமாக/ **<u>துணையாக/ஆதாரமாக</u>** வைத்துக் கொள்ளாமல் இருப்பது தியானம் என்று பிரசித்தி பெற்றது. இதுவே உத்தமமான ஆனந்தத்தை கொடுக்கும்.

<u>சமாதி</u>

निर्विकारतया वृत्त्या ब्रह्माकारतया पुनः। वृत्तिविस्मरणं सम्यक्समाधिर्ज्ञानसंज्ञकः।।१२४।।

124) The complete forgetfulness of all thought by first making it changeless and then identifying it with Brahman is called Samadhi known also as knowledge.

124) ஒரு வித மாறுதலும் இன்றி பிரஹ்மாகாரமாகவே விருத்தியைச் செய்து மேலும் அந்த விருத்தியையும் நன்கு மறந்து நிற்பது சமாதி ஆகும். இதுவே ஞானம் என்ற பெயரை உடையது.

एवं चाकृत्रिमानन्दं तावत्साधु समभ्यसेत्। वश्यो यावत्क्षणात्पुंसः प्रयुक्तः स भेवत्स्वयम्।।१२५।।

125) The aspirant should carefully practice this (meditation) that reveals his natural bliss until, being under

his full control, it arises spontaneously, in an instant when called into action.

125) இவ்விதமாக மனிதனுக்கு ஏவினவுடன் ஒரு க்ஷணத்திலேயே தானாகவே இந்த சமாதி ஸ்வாதீனமாக ஏற்படும் வரை இந்த செய்யப்படாத (ஸ்வபாவ ஸித்தமான) ஆனந்தத்தைத் தரும் சமாதியை நன்கு அப்பியாசம் செய்ய வேண்டும்.

ततः साधननिर्मुक्तः सिद्धो भवति योगिराट्। तत्स्वरूपं न चैकस्य विषयो मनसो गिराम्।।१२६।।

126) Then he, the best among Yogis having attained to perfection, becomes free from all practices. The real nature of such a man never becomes an object of the mind or speech.

126) பிறகு சாதனங்களை அநுஷ்டிக்க வேண்டிய அவசியத்திலிருந்து விடுபட்டவனாக அந்த சிரேஷ்டர் ஸித்தராகி விடுகிறார். அவருடைய ஸ்வரூபம் யாருடைய மனதிற்கும் வாக்குக்கும் எட்டக் கூடிய விஷயமாகாது.

समाधौ क्रियमाणे तु विघ्ना आयान्ति वै बलात्। अनुसंधानराहित्यमालस्यं भोगलालसम्।।१२७।।

लयस्तमश्च विक्षेपो रसास्वादश्च शून्यता। एवं यद्विघ्नबाहुल्यं त्याज्यं ब्रह्मविदा शनैः।।१२८।।

127-128) While practicing Samadhi, there appear unavoidably many obstacles, such as lack of inquiry, idleness, desire for sense-pleasure, sleep, dullness, distraction, tasting of joy, and the sense of blankness. One desiring the knowledge of Brahman should slowly get rid of such innumerable obstacles.

127-128) ஆனால், சமாதியை அப்பியாசம் செய்வதில் பலாத்காரமாக சில தடைகள் வரும். அவையாவன -- தொடர்ச்சியாக இல்லாமை, சோம்பல், விஷய சுகானுபவத்தில்

ஆசை, தூக்கம், அஞ்ஞானம், வெளியில் இழுபடல், ருசியை அநுபவித்தல், சூன்யமாக இருந்து விடல், இவ்விதமான பல விக்னங்களை பிரஹ்ம ஞானி மெல்ல மெல்ல விலக்க வேண்டும்.

भाववृत्त्या हि भावत्वं शून्यवृत्त्या हि शून्यता। ब्रह्मवृत्त्या हि पूर्णत्वं तथा पूर्णत्वमभ्यसेत्।।१२९।।

129) While thinking of an object the mind verily identifies itself with that, and while thinking of a void it really becomes blank, whereas by the thought of Brahman it attains to perfection. So one should constantly think of (Brahman to attain) perfection.

129) இருக்கும் பதார்த்தங்களில் விருத்தியை செலுத்தினால் அப்படி இருக்கும் தன்மை ஏற்படும். சூன்யமாக விருத்தியை வைத்துக் கொண்டால், சூன்யத் தன்மை ஏற்படும். அப்படியே பிரஹ்மாகாரமாகவே விருத்தியை வைத்துக் கொண்டால், பரிபூரணத் தன்மை ஏற்படும். ஆகையால், இந்த பரிபூரணத் தன்மையை அப்பியாசம் செய்ய வேண்டும்.

ये हि वृत्तिं जहत्येनां ब्रह्माख्यां पावनीं पराम्। वृथैव ते तु जीवन्ति पशुभिश्च समा नराः।।१३०।।

130) Those, who give up this supremely purifying thought of Brahman, live in vain and are on the same level with beasts.

130) எவர்கள் இந்த பரிசுத்தமான உத்கிருஷ்டமான பிரஹ்மாகார விருத்தியை விட்டு விடுகிறார்களோ, அவர்கள் வீணாகவே ஜீவித்திருக்கிறார்கள். அந்த மனிதர்கள் பசுக்களுக்கு/**மிருகங்களுக்கு** சமமானவர்கள்.

ये हि वृत्तिं विजानन्ति ये ज्ञात्वा वर्धयन्त्यपि। ते वै सत्पुरुषा धन्या वन्द्यास्ते भुवनत्रये।।१३१।।

131) Blessed indeed are those virtuous persons who at first have this consciousness of Brahman and then develop it more and more. They are respected everywhere.

131) எவர்கள் இந்த பிரஹ்மாகார விருத்தியை நன்கு அப்பியசிக்க/பழகத் தெரிந்தவர்களோ, எவர்கள் தெரிந்து மேலும் விருத்தியை அபிவிருத்தி செய்கிறார்களோ, அவர்களே ஸத்புருஷர்கள், தன்யர்கள், மூவுலகத்திலும் அவர்கள் நமஸ்கரிக்கத் தகுந்தவர்கள்.

येषां वृत्तिः समावृद्धा परिपक्वा च सा पुनः। ते वै सद्ब्रह्मतां प्राप्ता नेतरे शब्दवादिनः।।१३२।।

132) Only those in whom this consciousness (of Brahman) being ever present grows into maturity, attain to the state of ever-existent Brahman; and not others who merely deal with words.

132) எவர்களுடைய பிரஹ்மாகார விருத்தி நன்கு எல்லா விதத்திலும் விருத்தியடைந்து பரிபாகமடைந்து (Ripe maturity) இருக்கின்றதோ, அவர்கள்தான் ஸத்தான பிரஹ்மத் தன்மையை அடைந்தவர்கள். சப்தத்தை மாத்திரம் சொல்லிக் கொண்டிருக்கும் மற்றவர்கள் அவ்விதம் ஆக மாட்டார்கள்.

कुशला ब्रह्मवार्तायां वृत्तिहीनाः सुरागिणः। तेऽप्यज्ञानितमा नूनं पुनरायान्ति यान्ति च।।१३३।।

133). Also those persons who are only clever in discussing about Brahman but have no realization, and are very much attached to worldly pleasures, are born and die again and again in consequence of their ignorance.

133) பிரஹ்மத்தைப் பற்றி பேசுவதில் கெட்டிக்காரர்களாக மாத்திரம் இருந்து கொண்டு பிரஹ்மாகார விருத்தி இல்லாதவர்களாக நன்கு விஷயங்களில் ஆசை உள்ளவர்களாக இருப்பவர்களோ அஞ்ஞானிகளாக இருப்பதால்

அவசியம் (இந்த ஸம்ஸ்ாரத்தில்) திரும்பி வருவார்கள், மறுபடியும் போவார்கள்.

निमेषार्धं न तिष्ठन्ति वृत्तिं ब्रह्ममयीं विना। यथा तिष्ठन्ति ब्रह्माद्याः सनकाद्याः शुकादयः।।१३४।।

134) The aspirants after Brahman should not remain a single moment without the thought of Brahman, just like Brahma, Sanaka, Suka and others.

134) ஞானிகள் அரை நிமிஷம் கூட பிரஹ்மாகார விருத்தி இல்லாமல் இருக்க மாட்டார்கள். பிரஹ்மா முதலானவர்களும் ஸனகர் முதலானவர்களும் சுகர் முதலானவர்களும் எப்படி இருந்து வருகிறார்களோ, ஞானிகள் அப்படி இருந்து வருவார்கள்.

कार्ये कारणतायाता कारणे न हि कार्यता। कारणत्वं स्वतो गच्छेत्कार्याभावे विचारतः।।१३५।।

135) The nature of the cause inheres in the effect and not vice versa; so through reasoning it is found that in the absence of the effect, the cause, as such also disappears.

135) காரியத்தில் காரணத் தன்மை வரும், காரணத்தில் காரியத் தன்மை வராது. விசாரித்துப் பார்த்தால் காரியமில்லாத போது காரணத் தன்மையும் தானாகவே விலகி விடும். (**திருஷ்டாந்தம்**: குடத்தில் மண்ணாக இருக்கும் தன்மை இருக்கும், மண்ணில் குடமாக இருக்கும் தன்மை கிடையாது. குடம் இல்லாத விஷயத்தில் மண்ணுக்கு காரணம் என்ற பெயரே ஸித்திக்காது.)

अथ शुद्धं भवेद्वस्तु यद्वै वाचामगोचरः। द्रष्टव्यं मृद्घटेनैव दृष्टान्तेन पुनः पुनः।।१३६।।

136) Then, that pure reality (Brahman) which is beyond speech alone remains. This should be understood again and again verily through the illustration of earth and the pot.

136) இவ்விதம் காரணத் தன்மை, காரியத் தன்மை இரண்டுமற்று சுத்தமாக இருக்கும் வஸ்து வாக்குகளுக்கு

எட்டாதது. இதை மண் குட திருஷ்டாந்தத்தினால் அடிக்கடி பார்த்து உணர வேண்டும். (குடம் முதலான காரியத் தன்மையை அடையாமலும், குடம் முதலான காரியத்திற்கு இருக்கும் காரணமாகத் தன்மையையும் அடையாமல் இருக்கும் சுத்தமான மண் நாம ரூபமற்றதால் வியவஹார யோக்கியமல்ல).

अनेनैव प्रकारेण वृत्तिर्ब्रह्मात्मिका भवेत्। उदेति शुद्धचित्तानां वृत्तिज्ञानं ततः परम्।।१३७।।

137. In this way alone, there arises in the pure-minded, a state of awareness (of Brahman), which is, afterwards merged into Brahman.

137) இதே பிரகாரமாகத்தான், விருத்தி பிரஹ்ம விஷயமாக ஏற்படும். அதன் பிறகு, சுத்தமான சித்தத்தோடு கூடியவர்களுக்கு பிரஹ்மாகார விருத்தி ஞானம் ஏற்படும்.

कारणं व्यतिरेकेण पुमानादौ विलोकयेत्। अन्वयेन पुनस्तद्धि कार्ये नित्यं प्रपश्यति।।१३८।।

138) One should first look for the cause by the negative method and then find it by the positive method, as ever inherent in the effect.

138) முதலில் (காரியங்களிலிருந்து) வேறுபடுத்தி மனிதன் காரண பதார்த்ததைக் காண வேண்டும். பிறகு, அதே காரணம் காரியத்தில் எப்பொழுதும் தொடர்ந்து இருப்பதாக பார்ப்பான். (<u>**திருஷ்டாந்தம்**</u>: குடம், சட்டி, சராவம் முதலானதுகளுக்கு தனித் தனியாக ஏற்பட்ட லக்ஷணங்களை விலக்கிப் பொதுவாக உள்ளதைத் தெரிந்து கொண்டால்தான் இவனுக்கு காரணமான மண்ணின் தன்மை தெரியும். காரணமான மண்ணின் தன்மை தெரிந்த பிறகு, அது தன் தன்மையை விடாமலேயே குடம் முதலான காரியங்களில் ஊடுருவி இருந்து வருவதைப் பார்க்கலாம்.

कार्ये हि कारणं पश्येत्पश्चात्कार्यं विसर्जयेत्। कारणत्वं स्वतो नश्येदवशिष्टं भवेन्मुनिः।।१३९।।

139) One should verily see the cause in the effect, and then dismiss the effect altogether. What then remains, the sage himself becomes.

139) காரியத்தில் காரணத்தைப் பார்க்க வேண்டும். பிறகு (காரியத்திற்கு காரணத்தைத் தவிர தனித்து இருப்புக் கிடையாது என்று தெரிந்த பிறகு), காரியத்தை விட்டு விட வேண்டும். காரியமென்பது போனவுடன்) காரணம் என்கிற வியவஹாரம் தானே நாசம் அடைந்து விடும். பிறகு, மிஞ்சின ஸ்வரூபமாக மனனம் செய்பவன் ஆகி விடுவான்.

भावितं तीव्रवेगेण वस्तु यन्निश्चयात्मना। पुमांस्तद्धि भवेच्छीघ्रं ज्ञेयं भ्रमरकीटवत्।।१४०।।

140) A person who meditates upon a thing with great assiduity and firm conviction, becomes that very thing. This may be understood from the illustration of the wasp and the worm.

140) ஒரு மனிதன் தீவிரமான வேகத்துடன் நிச்சய புத்தியுடன் ஒரு வஸ்துவை பாவனை செய்து வருவானாகில், புழு எப்படி வண்டாக ஆகி விடுகிறதோ, இவனும் அறிய வேண்டிய அந்த வஸ்துவாகவே விரைவில் ஆகி விடுவான்.

अदृश्यं भावरूपं च सर्वमेतच्चिदात्मकम्। सावधानतया नित्यं स्वात्मानं भावयेद्बुधः।।१४१।।

141) The wise should always think with great care of the invisible, the visible, and everything else, as his own Self which is consciousness itself.

141) இது எல்லாம் கண் முதலானவைகளுக்கு விஷயம் ஆகாததும் ஆத்மா ஸத்ரூபமுமான சித்ஸ்வரூபமேயாகும் என்று அறிவாளியானவன் எப்பொழுதும் ஜாக்கிரதையுடன் தன் ஆத்ம ஸ்வரூபத்தை அநுஸந்தானம் செய்ய வேண்டும்.

दृश्यं ह्यदृश्यतां नीत्वा ब्रह्माकारेण चिन्तयेत्। विद्वान्नित्यसुखे तिष्ठेद्धिया चिद्रसपूर्णया।।१४२।।

142) Having reduced the visible to the invisible, the wise should think of the universe as one with Brahman. Thus alone will he abide in eternal felicity with mind full of consciousness and bliss.

142) (கண் முதலானவைகளால்) பார்க்கப்படுவதை எல்லாம் பார்க்க முடியாத (காரண ரூபமான)தாகச் செய்து பிரஹ்மாகாரமாகவே அநுஸந்தானம் செய்ய வேண்டும். வித்வானாக இருப்பவன் சைதன்ய ரஸம் நிரம்பிய புத்தியுடன் நித்தியமாய் சுக ஸ்வரூபமாக உள்ள பிரஹ்மத்திலேயே நிலைத்து நிற்க வேண்டும்.

एभिरङ्गैः समायुक्तो राजयोग उदाहृतः। किंचित्पक्वकषायाणां हठयोगेन संयुतः।।१४३।।

143) Thus has been described Raja-Yoga consisting of these steps (mentioned above). With this is to be combined Hatha-Yoga for (the benefit of) those whose worldly desires are partially attenuated.

143) இந்த 15 அங்கங்களுடன் நன்கு கூடியது ராஜ யோகம் எனப்படும். தோஷங்கள் கொஞ்சமாகவே பக்குவமானவர்களுக்கு இந்த ராஜ யோகத்துடன் ஹட யோகத்தையும் அப்பியசிக்க வேண்டும்.

परिपक्वं मनो येषां केवलोऽयं च सिद्धिदः। गुरुदैवतभक्तानां सर्वेषां सुलभो जवात्।।१४४।।

144) For those whose mind is completely purified this (Raja-Yoga) alone is productive of perfection. Purity of the mind, again, is speedily accessible to those who are devoted to the teacher and the Deity.

144) எவர்களுடைய மனஸ் நன்கு பரிபாகம் அடைந்திருக்கிறதோ, அவர்களுக்கு இந்த ராஜ யோகம் தனித்தே ஸித்தியைக் கொடுக்கும். குருவினிடமும் பகவானிடமும் பக்தி உள்ள யாவருக்கும் விரைவில் சுலபமாக அடையத் தக்கது.

इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यस्य श्रीगोविन्दभगवत्पूज्यपादशिष्यस्य श्रीमच्छंकरभगवतः कृतौ अपरोक्षानुभूतिः समाप्ता।।

## அபரோக்ஷ அநுபூதி முற்றியது

Please send corrections to rameshramanan@yahoo.co.uk